Registered as a Newspaper

பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 137

வியாழக்கிழமை
11 ஏப்ரல் 2024

பங்குனி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கச்சதீவும் நாங்களும்தான் இப்ப இந்தியாட அரசியல் கண்டியளோ"

## திருநெல்வேலி பகுதியில் வீடொன்றில் அடாவடி

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் உள்ள வீடொன்றும், வீட்டில் இருந்த உடைமைகளும் வன்முறைக் கும்பலொன்றால் நேற்றுமுன்தினம் அடித்துடைக்கப்பட்டுள்ளது.

ஆடியபாதம் வீதியில் உள்ள வீடொன்றே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. வீட்டின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தின் கண்ணாடிகள் அடித்துடைக்கப்பட்டதுடன், மோட்டார்சைக்கிள் எரியூட்டப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸ் நிலை 14

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் நடைபெறும்

# ஆர்ப்பாட்டங்களின் போது பொலிஸ் அராஜகங்கள்!

மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்ரல் 11

தமிழர் தாயகம் உட்பட இலங்கையில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களின்போது பொலிஸார் வன்முறையைப் பிரயோகித்து வருகின்றனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது. 15



## இலங்கைத் தமிழர்களை கொன்றது காங்கிரஸே!

உடன் இருந்தது தி.மு.க.வே; சீமான் ஆவேசக் கருத்து

சென்னை, ஏப். 11

இலங்கையில் தமிழர்களைக் கொன்றது காங்கிரஸ், உடனிருந்தது தி.மு.க., வேடிக்கை பார்த்தது அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. என்று தமிழகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். 14



## பிற்போடப்பட்ட தேர்தல் தேசப்பிரிய போராட்டம்

கொழும்பு, ஏப். 11

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். 14

## ஏப்ரல் 15 விடுமுறை

கொழும்பு, ஏப். 11

ஏப்ரல் 15 ஆம் திகதி பொது விடுமுறை தினமாக பொது நிர்வாக அமைச்சால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார். (அ-ம)

## உதயனுக்குள் நுழைந்து நபரொருவர் அட்டகாசம்!

கொலை அச்சுறுத்தலும் விடுத்தார்

விரிவு :- பக். 15

## நெளுக்குளத்தில் சடலம் மீட்பு

வவுனியா, ஏப்.11

வவுனியா, நெளுக்குளத்தினுள் சடலமொன்று நேற்று புதன்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது. 14

## சு.க.வின் அதிகாரம் யாரிடம்?

தேர்தல் ஆணைக்குழு விரைவில் ஆராயும்

கொழும்பு, ஏப். 11

சுதந்திரக் கட்சியின் அதிகாரம் யார் வசம் உள்ளது என்பது தொடர்பில் ஆராய்வதற்கு தேசியத் தேர்தல் ஆணைக்குழு எதிர்வரும் 18 ஆம் திகதி கூடவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைவராகச் செயற்படுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 14

மோ.சைக்கிள்

## திருட்டு சாவகச்சேரியில்; மீட்பு மன்னாரில்!

சாவகச்சேரி, ஏப். 11

சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை திருடப்பட்ட மோட்டார்சைக்கிள் சாவகச்சேரி பொலிஸாரின் துரித முயற்சியால் மன்னாரில் வைத்து 14

## யாழ். போதனாவில் குருதித் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனைத்துவகைக் குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக குருதி வங்கியிலும், குருதிக்கொடை முகாம்களிலும் குருதிக் கொடையளிப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாகக் குறைந்தமையே இந்தக் குருதித் தட்டுப்பாட்டுக்குப் பிரதான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய நிலைமையின்படி யாழ்ப்பாணம் போதனா மருத்துவ 14

# இராணுவத் தொழில்நுட்பத்தை இலங்கையுடன் பகிரத் தயார்!

இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 11

இந்தியா - இலங்கையுடன் இராணுவ மென்பொருள், வன்பொருள் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்துகொள்ளத் தயாராகவுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இந்தியா - இலங்கை பாதுகாப்பு கருத்தரங்கிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சந்தோஷ் ஜா மேலும் தெரிவித்ததாவது:-

வேறு எந்த நாட்டுடனும் இல்லாத அளவுக்கு இந்தியர்களும், இலங்கையர்களுமான நாங்கள் கலாசார, பாரம்பரிய 14



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

## இரண்டு பகுதிகளாகும் பரீட்சைத் திணைக்களம்

பரீட்சைத் திணைக்களத்தை எதிர்காலத்தில் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைப் பரீட்சைகளுக்கு பொறுப்பாக ஒரு பிரிவும் ஏனைய பரீட்சைகளுக்குப் பொறுப்பாக மற்றொரு பிரிவும் இயங்கும் வகையில் பரீட்சைத் திணைக்களத்தை இரண்டு பகுதிகளாக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ச-இ)

# பிறப்புரிமையான சுதந்திரத்தை எவரும் எழுதித்தர வேண்டியதில்லை



## யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப்.11**

**சுதந்திரம் எங்களது பிறப்புரிமை. அதை இன்னொருவர் எமக்கு எழுதித் தரவேண்டிய அவசியமில்லை. அதை இன்னொருவர் பறிக்கவும் முடியாது.**

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறையின் அரசறிவியல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அரசறிவியலாளன் இதழ் - 6 நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுதந்திரக் காற்றை நீங்களாகச் சுவாசிக்க முடியாது. முன்னெடுப்புகள் இல்லாமல் எதையும் சாதித்து விடமுடியாது. இந்தியா ஒரு பெரிய நாடு. எத்தனையோ மொழிகளையும், எல்லைகள் அனைத்திலும் பயங்கரமான பிரச்சினைகளைக் கொண்டதொரு நாடு. ஆனால் அங்கு எல்லாமிருக்கிறது.

தமிழ் மக்கள் தங்கள் பாதையை எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் கவனம் செலுத்தவேண்டும். அதற்காக புரட்சிதான் செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லிவிட்டு நான் வீட்டுக்குச் செல்லமுடியாது. யூதர்கள் அல்லது பலஸ்தீனியர்கள் முன்னர் எங்கு கண்டாலும் தங்களின் அடுத்த சந்திப்பு ஜெருசலேமில் என்று கைதட்டுவார்கள். நாங்கள் எங்களின் அடுத்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் என்று கைதட்டுகின்றோமா? தற்போது தேசியம் கதைக்கிறவர்கள் ஆசியாவிலேயே பிஸியான வர்கள். வாழ்வதோ கொழும்பில். லண்டன் குடியுரிமையும் கொண்டுள்ள அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற சிறப்புரிமையையும் கொண்டுள்ளனர்.

பலஸ்தீனம் போன்று எமது மண் பறிபோகவில்லை. நாங்கள் தற்போது பலஸ்தீனியர்கள் போன்று அகதி முகாம்களிலிருக்கவில்லை. எங்கள் தாய்நிலத்தைப் பாதுகாப்பதற்கான போதிய அறிவு எம் மத்தியிலுள்ளது. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் புரிந்துணர்வுப் பண்பு ஒவ்வொருவருக்கும் தேவையானதொன்று. ஆக்கிரமிக்கும் இனத்தின் செயற்பாடுகளைத் தமிழ்மக்கள் புரிந்து கொண்டு தங்களைப் பாதுகாக்கவேண்டும் - என்றார். (எ-66)

## சாகலவுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஏப்.11

தரமற்ற தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் ஜனாதிபதியின் அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்கவிடம் விசாரணை நடத்தவேண்டும் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலஞ்சம், ஊழல் மற்றும் வீண் விரயத்துக்கு எதிரான குடிமக்கள் சபையின் தலைவர் ஜமுனி கமந்த துஷார இது தொடர்பான முறைப்பாட்டை குற்றப்புலனாய் வுத் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளார்.

தரமற்றதடுப்பூசிக் கொள்வனவு தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு 100 நாள்களுக்கு மேலாகியும் அதற்குப் பொறுப்பான சில அரச அதிகாரிகளை கைது செய்யத் தவறியுள்ளனர் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மடுமாதாவுக்கு பெரு வரவேற்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

யாழ்ப்பாணத்தில் பவனிவரும் மடுமாதாவுக்கு மக்கள் திரண்டு பெரு வரவேற்பளித்து வருகின்றனர்.

மடு அன்னையின் முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மடுமாதாவின் திருச்சொரூபம் யாழ்.மாவட்டத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

யாழ்.மறை மாவட்டத்திலுள்ள ஆலயங்களுக்கு மாதாவின் திருச்சொரூ பம் எடுத்துச் செல்லப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தநிலையில் மடுமாதா வலம் வரும் இடங்களில் வறட்சி வெப்பத்தைப் போக்கும் முகமாக தண்ணீர் ஊற்றி குளிர்ச்சிப்படுத்துவதுடன் பூரண கும்பங்கள் வைத்தும் மடுமாதா வரவேற்கப்படுகிறார்.

மேலும் மாதா செல்லும் ஆலய பங்குகளும் அந்தப் பகுதி மக்களால் அலங்கரிக்கப்பட்டு விழாக் கோலம் பூண்டு காணப்படுகின்றன. (ச-17)

## கிளி. சந்தையில் குழாய்க் கிணறு

தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

கிளிநொச்சி, ஏப்.11

கிளிநொச்சி பொதுச் சந்தையில் காணப்பட்ட தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது என்று கரைச்சிப் பிரதேசசபைச் செயலர் தெரிவித்துள்ளார்.

அங்கு புதிதாக குழாய்க் கிணறு ஒன்று அமைக்கப்பட்டு, தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது என்றும், சந்தையில் காணப்பட்ட சுகாதாரச் சீர்கேட்டு நிலைமைகள் சீராக்கப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-13)

## இலவச அரிசிக்கு பதிவு

சாவகச்சேரி, ஏப்.11

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட இலவச அரிசி வழங்கலுக்கான பதிவுகள் தென்மராட்சிப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கிராம அலுவலகங்களில் இந்தப் பதிவுகள் முன்னெடுக்கப்பட்டன. முதியோர், மாற்றுத் திறனாளிகள், சமுர்த்திப் பயனாளிகளின் தகைமையுடையவர்கள், அஸ்வெசும நலன் புரித்திட்டத்தில் இணைக்கப்பட்ட பயனாளிகளின் தகைமையுடையவர்கள், திட்டத்துக்கு மேன்முறையீடு செய்தவர்கள் போன்றோரின் விவரங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

கடந்த முறை இலவச அரிசிப் பொதிகள் பெற்றவர்களில் சிலருக்கு இம்முறை கிடைக்கும் வாய்ப்பு இல்லை எனவும் பிரதேசத்தில் இம்முறை இலவச அரிசி பெறுவோரின் எண்ணிக்கை குறைவடையலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (எ-9)



## மாயமான அரிசியை கண்டுபிடிக்க சி.ஐ.டி.!

கொழும்பு, ஏப்.11

நிகவெரட்டிய, பொல்கஹவெல, மஹவ மற்றும் ஆனமடுவ ஆகிய இடங்களில் உள்ள அரசாங்க அரிசி களஞ்சியசாலைகளில் இருந்து 2022 ஆம் ஆண்டு 30 இலட்சம் கிலோ அரிசி காணாமற்போனமை தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பான முதற்கட்ட விசாரணை அறிக்கை குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போன நெல் கையிருப்பின் பெறுமதி சுமார் ஒரு பில்லியன் ரூபா என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் புத்திக இத்தமல்கொட தெரிவித்தார். (எ-இ)

## மல்லுக்கட்டுகிறார் மைத்திரிபால

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்ளக மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், மைத்திரி தரப்பும் பதில் தவிசாளர் ஒருவரை நியமிப்பதற்கான முயற்சியில் களமிறங்கியுள்ளது.

அத்துடன், சுதந்திரக் கட்சியின் தலைமையகத்துக்கு ஏற்கனவே பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் நேற்றையதினம் அங்கு சென்ற மைத்திரி தரப்பு மேலதிகமாக பூட்டொன்றை போட்டுள்ளது. சுதந்திரக் கட்சியின் தவிசாளராகச் செயற்படுவதற்கு மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ள நிலையில், அக்கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு அரசுடன் இணைந்து செயற்பட சு.க. குழுவினர் முயற்சித்து வருகின்றனர். இந்நிலையில் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் அவர்கள் ஒன்றுகூடி, பதில் தவிசாளராக நிமால் சிறிபால டி சில்வாவையும், தேசிய அமைப்பாளராக துமிந்த திஸாநாயக்கவையும்நியமித்துள்ளனர். இக்கூட்டத்தில் சந்திரிகா அம்மையாரும் பங்குபற்றி இருந்தார். இந்நிலையில் அரசமைப்பு சபையைக் கூட்டி பதில் தவிசாளர் ஒருவரை நியமிப்பதற்கு மைத்திரி தரப்பும் முயற்சித்து வருகின்றது. இவ்வாறு கட்சிக்குள் மோதல் உக்கிரமடைந்துள்ள நிலையில், மைத்திரிபால சிறிசேன நேற்று வெளிநாடு பயணமாகியுள்ளார். (ஓ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர் முரண்பாட்டுக்கு வித்திடும்

## சீ.வி.கே. சிவஞானம் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஏப். 11**

**ஜனாதிபதித் தேர்தலில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.**

-இவ்வாறு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞான்ம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தவேண்டும் என்பது தொடர்பாகத் தற்போது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் எங்களுடைய கட்சி ஒரு முடிவுக்கு வரவில்லை. என்னைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொது வேட்பாளரைத் தேடிப் பிடிப்பதற்குள்ளேயே முரண்பாடு எழுந்துவிடும். ஏற்கனவே நிலைமைகளும் அவ்வாறே உள்ளன. பேரம் பேச வேண்டிய சூழ்நிலைக்காக நாங்கள் ஒற்றுமையாக, பலமாக இருக்க வேண்டும்.

பொதுவேட்பாளர்களில் ஏனைய வேட்பாளர்களுடன் நாங்களும் சமநிலையிலிருக்கின்றபோது எங்கள் பேரம் பேசல் பலம் குறைவாக இருக்கலாம் அல்லது அவர்கள் எங்களுடன் பேரம் பேசாமலேயே போகும் சூழலைக் கூட உருவாக்கலாம்.

எமது கட்சி இதுதொடர்பில் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்த பின்னர் அதற்கு உடன்படுவதா? இல்லையா? என்பது தொடர்பில் நாம் தீர்மானிப்போம் - என்றார். (ச-66)

## வெடிபொருள்கள் அகற்றப்பட்ட காணிகள் கையளிப்பு

பளை, ஏப். 11

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவிலுள்ள 17 காணித்துண்டுகள், வெடிபொருள்கள் அகற்றப்பட்டு அவற்றின் உரிமையாளர்களிடம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டன. (ப-9)

## விடுவிக்கப்பட்ட மீனவர்கள் விமானம் மூலம் தமிழகத்துக்கு

யாழ்ப்பாணம், ஏப். 11

இலங்கைக் கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் சிறையிடப்பட்டு விடுவிக்கப்பட்ட 19 மீனவர்கள் விமானம் மூலம் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த 21 மீனவர்கள் கடந்த மார்ச் 17 ஆம் திகதி இரண்டு படகுகளில் காங்கேசன்துறை கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தினர்.

அவர்களில் இருவர் ஏற்கனவே எல்லைதாண்டி மீன்பிடித்து தண்டனை பெற்று விடுதலை செய்யப்பட்ட நிலையில் மீண்டும் அதே குற்றத்தில் கைதுசெய்யப்பட்டதையடுத்து அவர்களுக்கு ஒருவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. ஏனைய 19 மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையிலேயே 19 மீனவர்களுக்கும் கடவுச்சீட்டு வழங்கப்பட்டு சென்னை விமான நிலையத்தில் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ச-35)

## கெஹலியவின் மனு தீர்மானம் இல்லை!

கொழும்பு, ஏப். 11

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மனுவை விசாரணைக்கு எடுப்பதற்காக அறிவித்தல் விடுப்பதா? இல்லையா? என்ற தீர்மானம் எதிர்வரும் 30ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தரமற்ற நோய் எதிர்ப்பு மருந்துகளைக் கொள்வனவு செய்தமை தொடர்பில் விசாரணை முடியும் வரை கெஹலிய ரம்புக்வெலவை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த உத்தரவை ரத்துச் செய்யுமாறு கோரி கெஹலிய ரம்புக்வெல மனு ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## புதிய சின்னத்திலேயே ரணில் களமிறங்குவார்

யாழ்ப்பாணம், ஏப். 11

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதிய சின்னத்திலேயே ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளார் என்று ஜனாதிபதியின் ஆலோசகர் ஆஷு மாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு கட்சிகளின் ஆதரவுடன் பொதுவேட்பாளராகவே களமிறங்கவுள்ளார். யானைச் சின்னத்திலோ மொட்டிலோ போட்டியிடமாட்டார் - என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## ரூ. 1.75 கோடி பெறுமதியான சோள விதைகள் தேக்கம்!

வவுனியா, ஏப். 11

வவுனியாவில் உற்பத்தி செயயப்பட்ட 1 கோடி 75 இலட்சம் ரூபா பெறுமதியான புதிய கலப்பின சோள விதைகளை விற்பனை செய்யமுடியாத நிலையில் விவசாயிகள் காணப்படுகின்றனர்.

புதிய கலப்பின சோளம் பூவரசன் குளம், குருக்கள் புதுக்குளம், மணியர்குளம், எருக்கலம்கல், வேலங்குளம், பாவற்குளம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300



ஏக்கர் வரையிலான நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டது. சோளச்செய்கையில் ஈடுபட்டவர்கள் கலப்பின சோள விதைகளை பதப்படுத்தி அதனை நெடுங்கேணி பகுதியில் அண்மையில் திறந்துவைக்கப்பட்ட சோளவிதை உற்பத்திக் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தினர். இருந்தபோதும் அவற்றை விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்தும் இந்த நிலை நீடித்தால் அதன் முளை திறன் குறைவடைந்து அவற்றை கைவிடவேண்டிய நிலை ஏற்படும் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ-ஓ-10)



## தினம் தெரியுமோ?

நெருப்பில்லாமல் புகையாது. அதுமாதிரி காரணமில்லாமலும் நெருப்பு எரியாது. ஆனால் கிட்டடியில கல்லுண்டாய்வெளிக்குள்ள மூண்டு நாளாப் பத்தியெரிஞ்ச நெருப்புக்கு என்ன காரணமெண்டு இன்னும் ஒருத்தரும் கண்டுபிடிக்கேலையாம். யாழ்ப்பாணத்தில உள்ள குப்பை கூழத்தையெல்லாம் அங்கதானே கொட்டியிருக்கினம். அதால குப்பைக்குள்ள நெருப்பெரிஞ்சதைப் பற்றி ஒருத்தரும் பெரிசாக் கணக்கெடுக்கேலை. குப்பைக்குள்ள குண்டுமணி மட்டுமில்லை மாபியாக்களும், மருந்துக்கழிவுகளும் கூட ஒளிஞ்சிருக்கலாம். இந்தக் கல்லுண்டாய் குப்பையில எரிஞ்ச நெருப்பு தானாவே மூளுறதுக்கு சான்ஸ் இல்லை. குடிமனையில இருந்துகனதூரத்தில தான் எரிஞ்ச குப்பைக்குவியல் இருந்தது. அப்ப அந்த வீடுகளில இருந்து குப்பையில நெருப்புப் பிடிச்சிருக்காது. ஆரும் கிட்டப்போய்த்தான் நெருப்பை வைச்சிருக்கோணும்.

அப்ப என்னதான் நடந்திருக்குமெண்டு விசாரிக்கேக்க சில தகவல்கள் வெளியில கசிஞ்சது. எரிஞ்ச குப்பைக்குள்ள ஒரு ஆஸ்பத்திரியின்ர மருத்துவக் கழிவுகளும் இருந்திருக்கு. உண்மையில அங்க மருத்துவக் கழிவுகளை கொட்டுறதுக்கு அனுமதி இல்லை. ஆனால் அதை களவா அகற்றுறதுக்கு கிட்டத்தட்ட ஆறு இலட்சம் கைநீட்டி வாங்குப்பட்டதெண்டும் தகவல். இது மேலிடத்துக்கு தெரியாது. அதோட இந்தக் குப்பையளோட பொலித்தீன்களும் சேர்ந்து இருந்திருக்கு. பொலித்தீனை குப்பையோட வைச்சிருக்காமல் புறிம்பாக்கி போடச்சொல்லி புதுசா வந்த ஆணையாளர் உடும்புப்பிடியா இருந்திருக்கிறார். குப்பையையும் பொலித்தீனையும் பிரிக்கிறதெண்டால் அதுலேசுப்பட்ட வேலையில்லைத்தானே. அண்டைக்கு இரவு அந்தக் குப்பை போடுற இடத்தில ஒரு தண்ணிப்பார்ட்டி நடந்திருக்கு. அந்தப் பார்ட்டி முடியவும் குப்பை பத்தி எரியவும் சரியா இருந்ததெண்டு அக்கம் பக்கத்தில உள்ளவை சொல்லுகினம்.

இந்தக் குப்பை எரிஞ்ச தகவல் கிடைச்சும் முனிசிபல்காரர் அதை நூக்கிறதுக்கு உடன நடவடிக்கை எடுக்கேலையாம். நெருப்பெரியத் தொடங்கினவுடன, முனிசிபலுக்கு தகவல் கிடைச்ச ரண்டு, மூண்டு மணித்தியாலயத்துக்குப் பிறகுதான் தீயணைப்புப்படை அனுப்புப்பட்டிருக்கு. ஆனால் அதுக்குள்ள நெருப்பு முளாசி எரியத் தொடங்கினதால இப்போதைக்கு அதை நூக்க முடியாதெண்டு அவை இரவே திரும்பி வந்திட்டினம். பிறகு அடுத்த நாள் விடிய, குப்பையள் எல்லாம் எரிஞ்ச பிறகுதான் அவை போய் நெருப்புக்கு தண்ணியடிச்சு நூத்தவையாம். அதுக்குப் பிறகு 2 நாள் குப்பைமேடு புகைஞ்சபடியே இருந்திருக்கு. இந்த நெருப்பில குப்பையோட குப்பையா மண்வெட்டி, சவள் எண்டு நிறையச் சாமான்களும் எரிஞ்சதெண்டும், அதால கடும் இழப்பெண்டும் உள்ளுக்கால ஒரு தகவல். உந்தக் குப்பையக் கிளற வெளிக்கிட்டால் இன்னும் நாறும், இதோட நிப்பாட்டுவம்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுண்ணக்கல் அகழ்வு: ஆய்வில் நிரூபியுங்கள்

## கிராம சக்தி மக்கள் சங்கத் தலைவர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, ஏப். 11**

**பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வால் எந்தப் பாதிப்பும் இல்லை என ஏன் இதுவரை எவரும் ஆய்வு செய்து விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கவில்லை? என்று கிராம சக்தி மக்கள் சங்கத் தலைவர் செல்லப்பா குழந்தைவேல் கேள்வி எழுப்பியுள்ளார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.

பொன்னாவெளி பகுதியில் சுண்ணக்கல் அகழ்வைத் தடைசெய்ய வேண்டும் என வடமாகாண ஆளுநர், மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், அமைச்சர் என 25 தரப்பினருக்கு 2 ஆயிரத்து 500 பேரின் கையொப்பங்களுடன் மனுக்களைக் கையளித்துள்ளோம்.

இதுவரையில் எவரும் அதனை தடை செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அதனால் நாம் தொடர்ந்து போராடி வருகிறோம்.

இது அமைச்சருக்கு எதிரான போராட்டம் அல்ல. எமது வாழ்வுக்கான போராட்டம்.

இன்று வரை சுண்ணக்கல் அகழ்வினால் ஏற்படும் சாதக, பாதக தன்மைகள் தொடர்பில் எந்த ஆய்வுகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-20)

# வளங்களை அபகரிக்க இடமளிக்கமாட்டோம்!

## அனைத்து மக்கள் ஒன்றியம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் கபடத்தனமாக எமது பொன்னாவெளி கிராமத்தில் சுண்ணக்கல் அகழ எத்தனித்து வருகிறார். அதற்கு நாம் ஒருபோதும் இடமளியோம்.

-இவ்வாறு யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அனைத்து மக்கள் ஒன்றியச் செயலாளர் வி.சிறிபாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொன்னாவெளி மக்கள் அரசின் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைதியான முறையில் நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர். போராட்டத்தையும் மீறி கடற்றொழில் அமைச்சர் டோக்கியோ சிமெந்து நிறுவனத்துக்கு சுண்ணக்கல் அகழ்வுக்கு அனுமதியளித்துள்ளார்.

எமது பிரதேசம் தாழ்நிலப் பிரதேசம். கடலுக்கும் எமது நிலத்துக்கும் மூன்றடி இடைவெளியே உண்டு. அங்கு சுண்ணக்கல் அகழ்வில் ஈடுபட்டால் கடல் நீர் உட்புகுந்து எமது கிராமமே கடலில் மூழ்கிவிடும்.

போராடும் மக்களை விரட்டியடிக்க கடற்றொழில் அமைச்சர் மேற்கொள்ளும் சதி நடவடிக்கைக்கு இடமளிக்கமுடியாது- என்றார். (ச-20)

# குச்சவெளி ஆக்கிரமிப்பு ஆவணமாக வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 11

தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பூர்வீக பிரதேசமான குச்சவெளியை சிங்களமயமாக்கும் முயற்சிகள் சிங்கள - பௌத்த பேரினவாத அரசுகளால் கடந்த இருபது ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன.

குச்சவெளி எவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டது என்பதை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் ஆவணமாக வெளியிட்டுள்ளது.

குச்சவெளியின் சனத்தொகையில் 65 சதவீதம் முஸ்லிம்கள், 33 சதவீதம் தமிழர்கள், 2 சதவீதம் சிங்களவர்கள். 2002 ஆம் ஆண்டு விகாரைகள் அமைப்பதற்கான காணிப் பதிவுகள் ஆரம்பமாகின.

2014 ஆம் ஆண்டு பதினொரு விகாரைகள் குச்சவெளியில் பதிவு செய்யப்பட்டன. 2020ஆம் ஆண்டு சங்கமாலி, பம்பரகல, அத்தனகிகந்த, யன் ஓயா, சத்தர்ம யுக்திய விகாரைகள் சமய நடவடிக்கைகளுக்காக காணிகள் தேவையென கோரிக்கை விடுத்தன.

2021ஆம் ஆண்டு மூதூரிலுள்ள 64 ஆவது மைல் கல்லிலுள்ள கல்கந்த விகாரைக்கு எதிராகப் பதினொரு காணி உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

2022ஆம் ஆண்டு சங்கமாலி, பம்பரகல, அசிரிக்கந்த, நாகலேனா ஆகிய விகாரைகள் அமைந்துள்ள பிரதேசங்கள் புனித பிரதேசங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

2023ஆம் ஆண்டு சந்தி விகாரை, யன் ஓயா, சத்தர்ம யுக்திய விகாரைகள் நகர அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தித் திட்டங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன என சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்பை மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டிருக்கின்றது. (ஒ-6)

# முருகைக்கற்களை விற்றுப்பிழைப்பது ஈனம்

## சிறீதரன் எம்.பி. கண்டனம்

கிளநொச்சி, ஏப்.11

தமிழர்களின் சொத்தான முருகைக்கற்களை எடுத்து விற்றுபிழைப்பு நடத்த முயற்சிப்பது மிகவும் மோசமானது. அது ஓர் இனத்துக்குச் செய்கின்ற வரலாற்றுத் துரோகம். கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதனை உணர்ந்து செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சண்டித்தன அரசியல் அல்லது அடாவடி அரசியல் என்பது யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி எனப் பல இடங்களில் அவர் நடந்து கொண்ட விதங்கள் எல்லோராலும் உணரப்பட்டவைதான்.

பொன்னாவெளி கிராமமானது பாரம்பரியமான 'ஈழவூர்' என்கின்ற சரித்திர வரலாற்று அடிப்படைகளைக் கொண்ட பூர்வீகமான மண்ணாகும். அங்கு, சிமெந்து தொழிற்சாலை வரவில்லை, அந்தப் பிரதேசத்திலிருக்கும் முருகைக் கற்களைத் தோண்டி அவற்றை திருகோணமலைக்குக் கொண்டு செல்லப் போகிறார்கள். அதனால் அந்தக் கிராமத்தில் ஆழமான உப்புத் தண்ணீர் நிரம்பிய கிடங்குகள் உருவாக்கப்படும். கடலுக்கு அருகிலே கிடங்குகள் தோண்டப்படுவதால் கடல்நீர் கிராமத்துக்குள் உட்புகும் நிலைமை உருவாகும். அந்தப் பகுதி இடம் பெயர்கின்ற சூழ்நிலை உருவாகும் - என்றார். (எ-113)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும். காரிய அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** அதிகப்படியான செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். பணியாளர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**மிதுனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிவரும் நாள். நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். உறவினர்களால் காரிய அனுகூலமாகும்.

**கடகம்:** உறவினர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும். ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** உற்சாகமான நாள். உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும். வியாபாரத்தில் விற்பனை வழக்கம்போலவே காணப்படும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் தொடர்புகொண்டு பேசுவது மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிடிவாதப் போக்கு மனஅமைதியை பாதிக்க வாய்ப்புண்டு. அனுசரித்துச் செல்வது நல்லது. காரியம் அனுகூலமாக முடியும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளால் பெருமை ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார். விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். துர்க்கை வழிபாடு நலம் சேர்க்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். விற்பனையும் இலாபமும் சுமாராகத்தான் இருக்கும். சிவபெருமானை வழிபடுவது நன்று.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

# பள்ளிவாசல்களுக்கு சிறப்புப் பாதுகாப்பு

கொழும்பு, ஏப்.11

ரமழான் பண்டிகையை முன்னிட்டு பள்ளிவாசல்களுக்கு சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளது.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரைக்கு அமைவாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் முப்படையினர் இந்தக் கடமைகளில் ஈடுபடுத்தப் படவுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீண்டும் ராஜபக்ச பூச்சாண்டி!!!

**போ**ரின் பின்னரான ஜனாதிபதித் தேர்தல்களின் போது தமிழ் மக்களின் பிரதான அரசியல் தரப்பாக விளங்கிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுத்த தீர்மானங்கள் கால ஓட்டத்தில் தவறானவையாகவே மாறியிருக்கின்றன. ராஜபக்சக்களை வீழ்த்துதல் என்ற ஒற்றைப்புள்ளியை மையப்படுத்தியதாக எடுக்கப்பட்ட அந்தத் தீர்மானங்கள் தமிழ்மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் பெற்றுத்தரவில்லை. மாறாக தமிழ் மக்களின் தலைவர்கள் தங்களுக்குரிய 'தனிப்பட்ட' நன்மைகளைப் பெற்றுக்கொண்டிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் கூட இதே சாரப்பட ஒரு குற்றச்சாட்டை கூட்டமைப்பின் தலைவராக இருந்த சம்பந்தன் மீது சுமத்தியிருந்தார்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எப்போதுமே ராஜபக்சக்களை ஏற்றுக்கொள்வதற்குத் தயாரில்லை. அவர்களைத் தோற்கடிப்பதற்காக எதையும் செய்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். அதனால் தான் போரை நடத்திய இராணுவத்தளபதி பொன் சேகாவுக்கு கூட வாக்களித்திருந்தார்கள். அதன் பின்னரான தேர்தல்களிலும் ராஜபக்சக்களை எதிர்த்து களமிறங்கிய ஒருவரை ஆதரித்திருந்தார்கள். இந்தப் பின்னணியிலும், ஒவ்வொரு தேர்தல்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி புறக்கணிக்குமாறு கோரும் போது 'அது ராஜபக்சக்களுக்கு ஆதரவான நகர்வு' என்ற பரப்புரையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கடந்த காலங்களில் முன்வைத்திருந்தது. ஆனால் தாம் ஆதரவளித்த வேட்பாளர்கள் ஆட்சியில் அமர்ந்த பின்னர் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த்தேசியக் கட்சிகள் மக்களுக்காக அவர்களிடம் எதனைப் பெற்றுக்கொடுத்தார்கள். நல்லாட்சி க்காலத்தில் மைத்திரி - ரணில் அரசாங்கத்தை தாங்கள் கொண்டு வந்ததாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதிலும் குறிப்பாக சம்பந்தன் - சுமந்திரன் இருவரும் பகிரங்கமாகக் கூறிவந்தனர். அந்த அரசாங்கத்தைப் பாதிக்கும் எந்தவொரு செயற்பாட்டையும் தமிழ் மக்கள் முன்னெடுக்கக்கூடாது என்றும் கூறினர். அதற்கு அவர்கள் கூறிய காரணம் விந்தையானது. அதாவது தெற்கில் மீண்டும் ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வந்துவிடுவார்களாம். இதைச் சொல்லியே நல்லாட்சிக் காலத்தில் முட்டுக்கொடுத்தார் சம்பந்தன். நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கம் என்று சொல்லியே சம்பந்தன் - சுமந்திரன் இணை காலம் கடத்தியது. கடைசியில் புதிய அரசமைப்பும் வரவில்லை. ஒன்றும் நடக்கவில்லை. தமிழ் மக்கள் குழப்பாமலேயே ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர்.

இப்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைகள் ஆரம்பமாகியிருக்கின்றன. தென்னிலங்கையில் ஜே.வி.பி. சார்பில் அநுரவும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித்தும், ஜனாதிபதி ரணிலும் களமிறங்குவது இதுவரை உறுதியாகியிருக்கின்றது. பொதுஜன பெரமுன சார்பிலும் ஒருவர் நிறுத்தப்படக்கூடும். இவர்களில் யாருக்காவது வாக்களிக்கக் கூடிய மனநிலையில் தமிழ் மக்கள் இல்லை. போரின் பின்னரான ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் ராஜபக்சக்களுக்கு எதிரானவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக தமிழ் மக்களின் வாக்குகளைச் சூறையாடிய தென்னிலங்கைத் தலைவர்கள் அதன் பின்னர் தமிழ் மக்களை 'அம்போ' எனக் கைவிட்டமைதான் வரலாறு. அப்படியிருக்கையில் இப்போது களமிறங்குபவர்களில் எவரும் தமிழ் மக்கள் ஆதரிக்கக் கூடியவர்கள் இல்லை. இதனால், தேர்தலைப் புறக்கணிப்பது அல்லது தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பது என்ற இரண்டு தெரிவுகள் மாத்திரமே தமிழ் மக்களிடம் உண்டு. அந்தத் தெரிவுகளை நோக்கி தமிழ் மக்கள் செல்லும்போது மீண்டும் ராஜபக்ச எதிர்ப்பு என்ற அதரப்பழசான புராணத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கையில் எடுத்திருக்கிறார். கடந்த காலங்களில் அவர் முன்வைத்த இந்த ராஜபக்ச எதிர்ப்புக்கோசத்தால் தமிழ் மக்களுக்குக் கிடைத்த நன்மை என்ன? அதைச்சீர்தூக்கிப் பார்த்தபின்னரே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் அணுகவேண்டும்.



# இலங்கையில் அதிகரிக்கும் ஏழைமக்களின் எண்ணிக்கை

**கொழும்பு, ஏப்.11**

**இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் ஏழை மக்கள் என்று உலகவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2019 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏழை மக்களின் தொகை 11 வீதமாகக் காணப்பட்ட நிலையில், இந்தத் தொகையானது தற்போது 26 வீதமாக அதிகரித்துள்ளது. அதிகரிக்கும் பணவீக்கம், வருமான இழப்பு மற்றும் பணம் அனுப்புதல் குறைதல் போன்ற காரணிகள் வறுமை அதிகரிப்புக்கு பங்களிப்புச் செய்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சுமார் 60 வீத குடும்பங்களின் வருமானம் குறைந்துள்ளது. சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மூடப்படுகின்றமை தொழிலாளர் சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் 17.5 வீதமான குடும்பங்கள் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை எதிர்கொள்வதற்காக கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான செலவுகளைக் குறைக்கத் தொடங்கியுள்ளன என்றும் உலகவங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-6)

## 1,82,140 குடும்பங்களுக்கு 'அஸ்வெசும'

கொழும்பு, ஏப்.11

மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள் ஆராயப்பட்டபின்னர் மேலும் ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 140 குடும்பங்கள் 'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். அவர்களுக்கு செலுத்தப்படவேண்டிய நிலுவைத் தொகை எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## பேஸ்புக் போலிக்கணக்குகள் நாளாந்தம் 200 முறைப்பாடு!

தங்களின் பெயரில் இயங்கும் பேஸ்புக் போலிக் கணக்குகளை நீக்குமாறு கோரி, நாளாந்தம் சுமார் 200க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெறு கின்றன என்று கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தர்ஷிகா குமாரி ஜயசிங்க தெரிவித்துள்ளார். இந்த வருடத்தின் முதல் மூன்று மாதங்களில் சுமார் 1500 முறைப்பாடுகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கிடைத் துள்ளன. கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் பேஸ்புக் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு, அது தொடர்பான போலிக் கணக்குகளை நீக்கக் கோரியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## 779 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, ஏப். 11

சிங்கள - தமிழ் புத்தாண்டை முன்னிட்டு 779 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பல்வேறு சிறைகளிலுள்ள கைதிகளின் நடத்தை விதிகள் மற்றும் குற்றங்களின் தன்மைக்கமைய பொதுமன்னிப்பு அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## ஆங்கில மொழிமூல ஆசிரியர் நியமனம்

கொழும்பு,ஏப்.11

ஆங்கில மொழிமூல ஆசிரியர்கள் 2 ஆயிரத்து 500 பேரை சேவையில் இணைத்துக்கொள்வதற்கான பிரேரணை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கல்விய மைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் இணைந்து இந்தப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளனர். நாட்டிலுள்ள ஆயிரம் பாடசாலைகளில் இவர்கள் சேவையில் அமர்த்தப்படவுள்ளனர் என்று பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-6)

### நாளை

12.04.2024

**வெள்ளிக்கிழமை**

**பங்குனி 30**

சுபநேரம் : 06.06 -07.36


ராகுகாலம் : 10.36 - 12.06

### நாளொரு நல்வார்த்தை

**நீ நடந்து போக பாதை இல்லையே**
**என்று கவலைப்படாதே**
**நீ நடந்தால் அதுவே**
**ஒரு பாதை..!**

**—அப்துல் கலாம்—**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஏப்.11

கிறிசலிஸ் நிறுவனத்தால் வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படும் 'பெண்கள் தலைமையிலான ஒன்றிணைந்த மன்றங்களின் ஊடாக அமைதி மற்றும் தாங்குதிறன்மிக்க சமூகங்களை மேம்படுத்தல்' எனும் கருத்திட்டதின் ஓர் அங்கமாக, கூட்ட அறிக்கை பதிவு செய்தல் தொடர்பான பயிற்சிப்பட்டறை கிறிசலிஸ் அலுவலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ஐரோப்பிய ஒன்றிய நிதி அனுசரணையில் நடைபெற்ற குறித்த பயிற்சிப் பட்டறையில் வடமாகாணத்திலுள்ள குடிசார் அமைப்பு சம்மேளனத்தின் செயலாளர்கள், உப செயலாளர்கள் மற்றும் கிறிசலிஸ் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (எ-159)

# பிற மதங்களை மதித்தால் பிரச்சினைகள் உருவாகாது!

### வவு. வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

**மன்னார், ஏப்.11**

**ஒவ்வொரு மதத்தினரும் ஏனைய மதங்களை மதித்தால் பிரச்சினைகள் தலை தூக்காது என்று வவுனியா வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சீ.பி.அமல்ராஜ் தெரிவித்தார்.**

கடந்த திங்கட்கிழமை மன்னாரில் நடைபெற்ற இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நாட்டிலும் சரி, உலக நாடுகளிலும் சரி அதிகமான இடங்களில் மதங்களுக்கிடையே ஒரு புரிந்துணர்வு அற்ற நிலை காணப்படுவதாலேயே பல பிரச்சினைகள் தலை தூக்குகின்றன. இதற்குக் காரணம் ஏனைய மதங்கள் தொடர்பாக மக்களிடையே விளக்கம் இன்மையே யாகும்.

மத நம்பிக்கை ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட சுதந்திரம். இதை ஒவ்வொருவரும் மதித்து வாழ வேண்டும் - என்றார். (எ-60)

## தானியங்கள் கையளிப்பு

வவுனியா, ஏப்.11

வவுனியா மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

குளங்கள் மற்றும் கிராமங்களின் மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், கிராமிய மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக நீர்ப்பாசன அமைச்சால், பயிர்ச்செய்கைக்கான தானியங்கள் வழங்கும் வேலைத்திட்டம் நாடு பூராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் ஓர் அங்கமாகவே வவுனியா மாவட்ட விவசாயிகளுக்குத் தானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையப் பொறுப்பதிகாரி திருமதி இரத்தினம் காஞ்சனா, கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-18)



## யானைகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.11

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேராவில் கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாலையில் கிராமத்துக்குள் நுழையும் யானைகள் அதிகாலைவரை தங்கிநின்று பயன்தரு மரங்களையும், தோட்டப் பயிர்களையும் சேதமாக்குகின்றன என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யானை வேலிக்காகப் போடப்பட்ட தூண்கள் சேதமடைந்துள்ளன என்று தெரிவித்துள்ள மக்கள், அதைத் திருத்தி யானைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-19)

## மறுவாழ்வு மருத்துவமனை விரைவில் இயங்கும் சூழ்நிலை

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப்.11

மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள மறுவாழ்வு மருத்துவமனையைச் செயற்படுத்தக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெற்ற புதுவை பண்பாட்டுப் பெருவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மாங்குளத்தில் அமைக்கப்பட்ட மறுவாழ்வு மருத்துவமனையைச் செயற்படுத்த முடியாத நிலைமை இருந்தது. அதற்கான ஆளணியைப் பெறுவதில் சிக்கல் இருந்தது. அதற்காகப் பலமுறை முயன்றும் நிதிப்பற்றாக்குறையால் அது தாமதப்படுத்தப்பட்டு வந்தது.

நாங்கள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் ஜனாதிபதி அவரது செயலாளருக்கு விடுத்த விசேட பணிப்புரைக்கு அமைய இரு வாரங்களுக்கு முன்னர் ஆளணி முழுமையாக அனுமதிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையை முழுமையாகத் திறப்பதற்குரிய சாத்தியம் கிடைத்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வடக்கு மாகாணம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது. விசேட அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன - என்றார். (எ-19)



## சிரமதானம்

யாழ்ப்பாணம், ஏப்.11


இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சிவானுஜன் தலைமையில் அந்தப்பகுதி இளைஞர்களால், இணுவில் ஆரம்பப் பராமரிப்பு சுகாதார மருத்துவமனை வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (எ-66)

## சிறப்பு நிகழ்ச்சிகள்

தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் பங்குகொண்ட சிறப்பு நிகழ்ச்சிகள், கந்தர்மடம் அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலகத்தின் ஏற்பாட்டில், காலை, மாலை என இரு அமர்வுகளாக நல்லூர் ஆதீனப் பிரதான மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலக இயக்குநர் இ.சர்வேஸ்வரா தலைமையில் இடம்பெற்ற காலை அமர்வில், தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் வளவாளராகக் கலந்து கொண்ட பட்டிமன்றங்களில் பேசும் ஆர்வமுள்ள இளையோருக்கான பயில்களமும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற மாலை அமர்வில் 'இளைஞர்களின் எதிர்காலத்தை ஆகச் சிறப்பாகச் செப்பனிடுவது எந்தச் சூழல் ?' எனும் பொருளில் இலக்கியச்சுடர் த.இராமலிங்கத்தை நடுவராகக் கொண்ட சிந்தனை அரங்கமும் இடம்பெற்றன. (ப-66)








## உளவியல் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ். பல்கலைக்கழக உளவளத்துறை மாணவர்களுக்கான உளவியல் சோதனை மற்றும் புத்தாக்கச் சிந்தனைகளை செயல் வடிவமாக்குவது தொடர்பான செயலமர்வு, யாழ். பல்கலைக்கழக உளவளத்துறை விரிவுரை மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது. நல்லூர்ப் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உதவியாளரால் நடத்தப்பட்ட இந்தச் செயலமர்வில் மாணவர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் வளவாளர்கள் கலந்து கொண்டனர். (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்த, ஸ்ரீ மாதுமையம்பாள் உடனுறை திருக்கோணைநாதப் பெருமானின் பங்குனி உத்தர பிரமோற்சவப் பெருவிழாவின் தீர்த்தோற்சவம், பாவநாச தீர்த்தத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ப-50)



# வெளிநாட்டுப் பயணத்தை கட்டுப்படுத்தும் ஜனாதிபதி

**கொழும்பு, ஏப்.11**

**ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருவதால் வெளிநாட்டுப் பயணங்களை முடிந்தவரை கட்டுப்படுத்தவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சர்களுக்கும், அரச உயர்மட்ட அதிகாரிகளுக்கும் அவசர கட்டளை பிறப்பித்துள்ளார்.**

மேதினக் கூட்டத்தின் பின்னர் தேர்தல் பணிகளைத் தீவிரப்படுத்த ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை நேரடி இலக்காகக் கொண்டு அரசியல் பணிகளைத் தொடங்குவதற்கான திட்டத்தை ரணில் வகுத்துள்ளார். இந்த ஆண்டு மேதினப் பேரணியை மிகப் பெரிய அளவில் நடத்த ரணில் திட்டமிட்டுள்ளார். தற்போது நாடு முழுவதும் தொழில்முறை குழுக்களுடன் கூட்டங்களை நடத்தும் பணியில் ஐ.தே.க. ஈடுபட்டுள்ளது. பல கட்சிகள் மற்றும் குழுக்கள் இணைந்து கொள்ளவுள்ள பரந்த கூட்டணியைப் பிரதிநிதித்து வப்படுத்தி ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகக் களமிறங்கும் நோக்கில் ரணில் இந்தத் திட்டங்களை வகுத்துள்ளார். (எ-இ)

## பொன்னாவெளி நிலமீட்பு: தே.ம.சக்தி ஆதரவளிக்கும்

கிளிநொச்சி, ஏப். 11

தங்கள் நிலத்தைக் காக்கப் போராடும் பொன்னாவெளி மக்களுக்கு ஆதரவாக எப்போதும் தேசிய மக்கள் சக்தி நிற்கும்.

- இவ்வாறு அந்தக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர், நேற்றுமுன்தினம் யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது தெரிவித்தார்.

தங்கள் நிலத்தை காக்கவே அந்தப் பகுதி மக்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். பொன்னாவெளி மக்களின் போராட்டம் கட்சி சார்ந்த போராட்டம் அல்ல. நிலம் சார்ந்த போராட்டம்.

மக்களின் நியாயமான கோரிக்கைக்குத் தீர்வு காண முனையாமல், தமிழ்த் திரைப்படம் ஒன்றில் அத்திப்பட்டி என்ற கிராமம் அழிக்கப்பட்டது போன்று இந்தக் கிராமத்தையும் அழிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயல்கின்றாரா? என்ற கேள்வியே எம் மத்தியில் உள்ளது. பொன்னாவெளி மக்களின் கோரிக்கை நியாயமானது. அதனால் அவர்களுக்கு தேசிய மக்கள் சக்தி என்றுமே ஆதரவாக நிற்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-20)



சாவகச்சேரி, சக்தி அம்மன் தமிழ் வித்தியாலய விசேட கல்வி மாணவர்களுக்கான மகிழ்ச்சிகரமான செயற்பாடு நிகழ்வு, வித்தியாலய முன்றலில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ப-9)



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, நல்லூர் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக நல்லூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவும், சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும் இணைந்து முன்னெடுத்த கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் நிகழ்வு, நல்லூர் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. (ப-66)

## முன்னாள் ஜனாதிபதிகளின் வாகனங்கள் மூலம் மோசடி!

கொழும்பு, ஏப்.11

முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய அறுபதுக்கும் மேற்பட்ட அதி சொகுசு வாகனங்கள் மூலம் 200 கோடி ரூபாவுக்கும் அதிகமான வாடகைப் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போது அவற்றுள் இரண்டு வாகனங்கள் காணாமற் போயுள்ளன என்றும் ஊழலுக்கு எதிரான குரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் உறுப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான வசந்த சமரசிங்க தெரிவிக்கையில்,

இந்த வாகனங்களுக்கு ஜனாதிபதி செயலகமே பொறுப்பு என்பதால், இது தொடர்பான வழக்கு ஜனாதிபதி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் 2006ஆம் ஆண்டு முதல் மூன்று ஜனாதிபதிகள் பயன்படுத்தியுள்ளனர்.

இந்த வாகனங்கள் இலங்கையில் உள்ள பிரபல தனியார் நிறுவனத்திடம் இருந்து குத்தகைக்கு பெறப்பட்டுள்ளன. எந்தெந்த ஜனாதிபதிகள் வாகனங்களைப் பயன்படுத்தினார்கள்? எவ்வளவு பணம் செலுத்த வேண்டியிருந்தது? வாகன இலக்கங்கள் உள்ளிட்ட தகவல்கள் எதிர்காலத்தில் ஊடகங்கள் ஊடாக பகிரங்கப்படுத்தப்படும்.

பணம் செலுத்தத் தவறியதால், செலுத்தப்படாத தொகைக்கு 3 தொடக்கம் 4 வீதமான மாதாந்திர வட்டி வசூலிக்க சம்பந்தப்பட்ட வாகன நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. வரவு-செலவு திட்டம் சமர்ப்பித்தபோது முன்னாள் ஜனாதிபதிகள் என்ன செய்தார்கள்? என்பதில் சிக்கல் இருக்கின்றது என தற்போதைய ஜனாதிபதி கூறியிருந்தார். இது தொடர்பான தகவல்கள் எதிர்காலத்தில் பகிரங்கப்படுத்தப்படும் - என்றார். (எ-இ)




இணுவில் பொதுநூலகம் லம்போதரா விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு, நூலக தகவல் தொழில்நுட்ப மைய விரிவுரை மண்டபத்தில் இணுவில் பொதுநூலகத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 03.05.1949 மறைவு : 25.03.2023

## கந்தையா விஸ்வலிங்கம்

திதி: 12.04.2024

**அப்பா....!**

ஊரே உங்களைப் பார்த்து மெய்சிலிர்த்த
வாழ்வு ஏனோ முடிந்துபோனது
உதவியென்றால் உங்கள் கரம்
அரவணைக்கும் என்ற உண்மை உறங்கிப் போனதோ
மற்றவன் எப்படியும் வாழட்டும் என்று
எப்போதும் இருந்ததில்லை இப்படி வாழுங்கள் என்று
இதமாய் ஆறுதல் தரும் ஓர் ஆண்டு உங்களைப்
பிரிந்து வாழும் எமக்கு எங்கேயப்பா - ஆறுதல்
ஆண்டவன் பொன்னடியில் ஆராத இன்பமுடன் நீங்கள்
இருக்க என்றும் வேண்டுகின்றோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு திவசக்கிரியைகள் நாளை (12.04.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நிகழவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**
**077 915 1402**

48 /16 பரவக்குளம் 3 ஆம் ஒழுங்கை,
சிவன் வீதி, திருநெல்வேலி.

(cs.28511) (N-1)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## உப அலுவலகம் - நீர்வேலி
## ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்.

யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகத்திற்குட்பட்ட ஆதன இல-08, வட்டாரம்-04, அரசகேசரிப்பிள்ளையார் கோயில் வீதி என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம், சொந்தக்காரர் உரிமை கோருநர் மு.சுகுமாரன் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தினை நீர்வேலி தெற்கு, நீர்வேலி தற்போது பிரான்ஸ் நாட்டில் வதியும் கந்தையா சுகுமாரன் என்பவர் 2017.11.09ம் திகதி பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்ரமணியம் முகதாவில் 11415 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நீர்வேலி தெற்கு, நீர்வேலி என்னுமிடத்தைச் சேர்ந்த "சுகுமாரன் மனைவி மீனலோசனி" என்பவருக்கு நன்கொடை கொடுத்துள்ளார்.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட உறுதியின் தாயுறுதி ( 16.07.2014 திகதி 9558ம் இலக்கத்தில் நொத்தாரிஸ் கதிரேசு சிவசுப்ரமணியம் அவர்கள் அத்தாட்சிப்படுத்திய உறுதி ) பிதா வழி முதுசமாக வந்தடைந்து தனது ஆட்சியில் தங்கு தடையின்றி இருந்து வருகின்றது என குறிப்பிட்டு எழுதப்பட்ட பிரகடண உறுதியாக காணப்படுகின்றது. இதன் பிரகாரம் "தனக்கு சொந்தமானதும் நீண்டகால ஆட்சியுமாயுடையதென்றும்" குறிப்பிட்டு குறித்த 11415ம் இலக்க நன்கொடை உறுதி எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.


வடமாகாணம், யாழ் மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று, நீர்வேலி இறை (வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு, வலி.கிழக்குப் பிரதேச சபைப் பகுதி, கிராம அலுவலர் பிரிவு J/268 "இந்தன் தோட்டம்" நிலப் பரப்பு 14 குளி 13.56. இது நில அளவையாளர் கே.பரமேஸ்வரன் அவர்களால் 2014.05.31ம் திகதி1774/2014ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில் துண்டு 01 எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லைகள் கிழக்கு துரைசிங்கம் விநாயகலிங்கத்தின் ஆதனம், வடக்கு கணேசலிங்கம் மனைவி நவரூபியின் ஆதனம், மேற்கு தியாகராஜா முத்துக்குமாரின் ஆதனமும், தனபாலசிங்கம் சரச்சந்திரனின் ஆதனமும் தெற்கு றோட்டு இதனடங்கலும் என காணப்படுகின்றது.

தற்போது இவ்வாதனத்தை சுகுமாரன் மனைவி மீனலோசனி, தனது பெயரிற்கு எமது ஆதனப்பதிவேட்டில் ஆதனப் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறும், யாரும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது "சுகுமாரன் மனைவி மீனலோசனி" என்னும் பெயரிற்கு, பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகிழக்கு பிரதேசசபை,
புத்தூர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 10 . 1951



இறப்பு 07 . 04 . 2024

## அமரர் நடேசர் சிவயோகசுந்தரம் (சின்னத்தம்பி)

**(இளைப்பாறிய உத்தியோகத்தர் - தொழில்நுட்பக் கல்லூரி - வட்டுக்கோட்டை - Business Mechine Company - Colombo 13)**

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு ஜாஎலயை வசிப்பிடமாகவும் கொண்ட சிவயோகசுந்தரம் (சின்னத்தம்பி) கடந்த 07-04-2024 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் எஸ்தர் (ஜாஎல) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான நடேசர் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிறிஸ்தோபர் நியூமன் - பெறில் நியூமன் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவஞானசுந்தரம் (கனடா), சிவகாம்பிகை, கமலாம்பிகை (ஆச்சி), இராஜேஸ்வரி (பவானி ரீச்சர் - மானிப்பாய் இந்துக் கல்லூரி), சிவராஜசுந்தரம் (அபுதாபி), ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுரேஸ் (Brendx company - ஜாஎல), சிவசுரேஷினி (லண்டன்), சிவநரேந்திரன் (Colombo - Assistant General Manager Head of Broker Sales of Allianz Insurance Lanka Ltd) ஆகியோரின் அன்புத் தந்தையும், நீட்டா (ஜாஎல), பிரதீபன் (லண்டன்) சாதனா (ஜாஎல) ஆகியோரின் அன்பு மாமனாரும், சொமேஸ், சலோம், அயோன், ஹரிஷ், பவிஷா, எமிஷியா, எவான் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ் சென்றவர்களான பாலேந்திரன் (P.H.F Assistant), உருத்திரமூர்த்தி மற்றும் லக்சுமி, மைதிலி ஆகியோரின் அன்பு மைத்துனரும், குமரன் (இலண்டன்), நந்தன் (இலண்டன்), ஸ்ரீ பிரணவன் (யா/இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்பு சின்னமாமாவும், முகுந்தன் (கனடா), புவனி (கனடா) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது சுதுமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


தகவல்:
திருமதி சிவகாம்பிகை பாலேந்திரன் (சகோதரி)
021 225 5336
076 842 6349

பாடசாலை முன்பாக,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

(CS/00174) J-1

# மரண அறிவித்தல்

மலர்வு 12 . 12 . 1945



உதிர்வு 09 . 04 . 2024

## முத்தையா தனபாலசிங்கம்

**(ஓய்வுபெற்ற உப அதிபர் யா/வைத்தீஸ்வரா கல்லூரி)**

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா தனபாலசிங்கம் நேற்றுமுன்தினம் (09.04.2024) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சஜீவன் (இயன் மருத்துவர் யாழ் போதனா வைத்தியசாலை) இன் அன்புத் தந்தையும், மிதுலா (ஆசிரியை - நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்) இன் அன்பு மாமனாரும், அக்ஷராவின் செல்லத் தாத்தாவும், தர்மலிங்கம், தர்மசவுந்தரி, கமலாதேவி, காலஞ்சென்ற கேசவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிவசுந்தரலிங்கம், விஜயலட்சுமி மற்றும் சந்திரவதனா, யோகலிங்கம், மகாலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
**077 843 5024**
**021 222 0394**

220 [illegible] வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(CS/54688) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 05 . 1936 — மறைவு 10 . 04 . 2024



## தம்பிஐயா குமாரசாமி

**(ஓய்வு பெற்ற அதிபர்)**

மீசாலை கிழக்கை பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி கொடிகாமம் மற்றும் மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பிஐயா குமாரசாமி நேற்று (10.04.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அன்னப்பிள்ளை (அன்னலட்சுமி-ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-இலட்சுமிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மகனும் கதிரேசு-சிவகாமிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்றவர்களான ஞானபூபதி, விக்கினேஸ்வரன் அவர்களின் சகோதரனும் காலஞ்சென்ற சிதம்பரநாதனின் மைத்துனரும் சுதர்சன் (UK), சுதர்சினி (France), சுகுந்தன் (UK), சுபாஜினி (ஆசிரியை.யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பபாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயவதனி (UK), பேரின்பநாயகம் (France), கமலினி (UK), இரமேஸ் (ஆசிரியர் யா/மிருசுவில் R.C.T.M.S) ஆகியோரின் அன்பு மிகு மாமனாரும் ஹனுராம், பிராமி, ஆரணி, ஆசிகன், யதுர்ஷன் , சபிஷன், கனுஷன், திலக்ஷன், திஷானன், திதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை வெள்ளிக்கிழமை (12.04.2024) 11.00 மணியளவில் மீசாலை கிழக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 627 9474**

(CR 42203) V-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 02 . 1944 — இறப்பு 09 . 04 . 2024



## திருமதி பரமேஸ்வரி அன்ரனி

**(ஓய்வுபெற்ற உப அதிபர் -யா/ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலயம்)**

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இல.44, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி அன்ரனி நேற்றுமுன்தினம் (09.04.2024) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பர்னாந்து யோசேப் - ஞானாதிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற திரு. பர்னாந்து யோசேப் அன்ரனி (ஓய்வுபெற்ற பதில் நீதிவான், சட்டத்தரணி) அவர்களின் பாசமிகு மனைவியும், வசந்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை - யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி), வரதராஜன் (ஜேர்மனி), வாசுகி (ஆசிரியை- யா / சென் தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை), வசந்தகுமாரி (அமெரிக்கா - முன்னாள் மேலதிக மாவட்ட பதிவாளர் நல்லூர், கரவெட்டி), மஞ்சுளா (ஆசிரியை - யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற தெய்வேந்திரகுமாரன், வாணி (ஜேர்மனி), அன்ரன் இராஜசேகரன் (மின் இணைப்பாளர்), அருளேந்திரன் (அமெரிக்கா), நித்தியலிங்கம் (ஆசிரியர் - யா / கோண்டாவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஹாத்மி (ஜேர்மனி), டிவியந், டிசாந், மவிதா (அமெரிக்கா), மகிதா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசையா (ஓய்வுபெற்ற புகையிரத அத்தியட்சகர்), புவிலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), இராசரத்தினம் மற்றும் சிவஞானம் (பொறியியலாளர் இ.போ.ச), பரமானந்தம் (பிரான்ஸ்), பாலச்சந்திரா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் சகோதரி யும், காலஞ் சென்றவர்களான பரிபூரணம், மரியமுத்து, சங்கரப்பிள்ளை மற்றும் சுசீலா, பரமேஸ்வரி, புவனேஸ்வரி (பிரான்ஸ்), பவானி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.04.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணி யளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
021 222 4863

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மண்ணில் 16 . 01 . 1938 — விண்ணில் 10 . 04 . 2024



## சுவாம்பிள்ளை மரிசலீன் (யேசு மாஸ்ரர்)

யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும் 18, மத்தியூஸ் வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் சுவாம்பிள்ளை மரிசலீன் (யேசு மாஸ்ரர்) 10.04.2024 புதன்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை - சலோமை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான பத்திநாதர் - பொன்னுமுத்து தம்பதியரின் மருமகனும், லில்லியம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பெனடிற், செல்வராசா, பிலிப் (காணிக்கை), செல்வராணி, புஸ்பராணி மற்றும் பேதுருப்பிள்ளை (சின்னராசா),திரேசம்மா (கனடா), லூத்தம்மா, தங்கரட்ணம், லீலா, தங்கராணி, ஆகியோரின் சகோதரரும், ஜோய்றோஸ் (ஜெயந்தி), ஸ்பெல்மன் (ஆசிரியர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), றூபின் றோஸ் (வசந்தி-அதிபர் அல்மினா முஸ்லீம் மகா வித்தியாலயம் குருணாகல்), பிறிம் றோஸ் (சுகந்தி-ஆசிரிய ஆலோசகர்-கணிதம், தீவக வலயம்), சிபிலா றோஸ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் வேலணை), திலீபன் (கட்டட பட வரைஞர் - ஓமான்), ஸ்ரீபன் (வைத்தியர் - மன்னார் மாவட்ட வைத்திய சாலை), ஜஸ்டின் (பொறியியலாளர் - லண்டன்) ஆகியோரின் தந்தையும், ஞானேஸ்வரன் (ஆசிரியர்-சென்ஜோசப் வித்தியாலயம் கொழும்புத்துறை), சாமர விஜயசிங்கா (விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்-விவசாய அமைச்சு குருணாகல்), பாலகுமாரி (முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்-மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்), கீதபொன்கலன் (ஆசிரியர் - யா/கொட்டடி நமச்சிவாய வித்தியாலயம், இயக்குநர் மார்ஷல் அக்கடமி), சிவஸ்கரன் (எழுதுவினைஞர் நீதிமன்றம் சாவகச்சேரி), ஜெயந்தி (ஆசிரியர், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), பஞ்சகல்யாணி (வைத்தியர், அம்பன் வைத்தியசாலை),ஜெயந்தினி (அழுகுக்கலை நிபுணர்) ஆகியோரின் மாமனாரும், அருண் (பொறியியல் பீட மொறட்டுவ மாணவன்), அஸ்மிதா, செரோன், ஆன்பெலிசிற்றா, அனோஜன், கிருணி, ஹெப்சிபா, அன்றியா, ஹரிந்து, புராதனி, டியோன், எய்டன், அரண் சியோன், துஷான் ஆகியோரின் பேரனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.04.2024) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மாலை 3.00 மணியளவில் மரியன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு:
077 611 6724, 077 285 0795
077 358 0758, 077 947 9828
077 196 2186

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/546691) J-1


# வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hardware) ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
**077 494 9683, 077 077 6469**

# பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் நகை வியாபார நிலையத்திற்கு
**பணியாளர்கள் தேவை.**
**தகைமை: O/L , A/L**

நேரில் வரவும் :
75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

**021 222 2863, 077 618 3302**

(CR/42192) J-1


# கண்ணீர் அஞ்சலி

## கலாபூஷணம் அம்பலவாணர் ஜெயராமன்



வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை முன்னாள் தலைவரும் சிறந்த வயலின் இசைக் கலைஞருமாகிய ஜெயராமன் அவர்களின் மறைவு எமக்கு பேரிழப்பாகும். அவருக்கு எமது இதய அஞ்சலிகளை உரித்தாக்குகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மகர்த்தா சபை
வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்
(நாச்சிமார் கோவில்) யாழ்ப்பாணம்.

(CS 00183) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
28.03.2023 முதல் சித்திரைப்புத்தாண்டு வரை

ஆடைகளின் சாம்ராஜ்யம்

இந்தியன் செலக்ஷனின்

சித்திரைப் புத்தாண்டு

ஆடைக் கொண்டாட்டம்



திருமணப்பட்டுச் சாறிகள்,
கொட்டன் சாறிகள், சல்வார்கள்,
சல்வார் துணிகள், டொப் வகைகள்,
சேட், ரீ சேட், பாட்டி புரொக், லெஹங்கா
மற்றும் ஏராளமான ஆடைத்
தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே
முந்திக்கொள்ளுங்கள்

விசேட விலைக் கழிவு

ரெடிமேற் கொட்டன் சல்வார்
ரெடிமேற் நெற் சல்வார் 500/=

28.03.2024 முதல்
சித்திரைப் புத்தாண்டு வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

இந்தியன் செலக்ஷன்

இடம் : வீரசிங்கம் மண்டபம் -யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


# நுழைவாயில் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 11

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தெற்கு அலங்கார வாசல் மற்றும் அன்னதான மண்டபம் ஆகியவற்றின் திறப்பு நிகழ்வு விநாயகர் சதுர்த்தி நாளான நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-17)

# போதை வியாபாரிகளை கைதுசெய்ய நடவடிக்கை

கண்டி, ஏப்.11

ஐக்கிய அரபு, இராச்சியத்தில் தஞ்சம் புகுந்துள்ள போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த கும்பல்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற இளைஞர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். (எ-6)

# புத்தாண்டு விழா

பளை, ஏப்.11

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக்த்தின் சித்திரைப் புத்தாண்டு விளையாட்டு விழா, முகமாலை சிவபுரம் விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி புத்தாண்டு தினத்தன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)


வேலையாட்கள் தேவை (பெண்)

தனியார் நிறுவனம் ஒன்றின் கச்சேரி - நல்லூர் வீதியில் அமைந்துள்ள
சிற்றுண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு நன்கு முன்
அனுபவமுள்ள சிற்றுண்டிகள் ( பற்றிஸ் / றோல் ) தயாரிப்பதற்கு
**பெண் வேலையாட்கள் தேவை.** கீழ் குறிப்பிடப்பட்டுள்ள
தொலைபேசி இலக்கத்துடன் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (CS/54664) J-1

தொடர்பு:- 076 363 1895


## மரண அறிவித்தல்



## பவானி விஸ்வலிங்கம்

காரைநகர் மணற்பிட்டியை பிறப்பிடமாகவும் செம்பாடு தங்கோடை, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பவானி விஸ்வலிங்கம் அவர்கள் 08.04.2024 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு - தவமணி தம்பதியரின் மூத்தமகளும் களபூமி சத்திரந்தையை சேர்ந்த காலஞ்சென்ற பொன்னம்பலம்- செல்லம்மா தம்பதியரின் மருமகளும் நித்தியரூபி, மதனரூபிராசன், கமலரூபிராசன், சிவாஜினி, சந்திராதேவி, காலஞ்சென்ற சோதிலிங்கம், இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரபாகரன் (UK), கருணாகரன் (கிளிநொச்சி வர்த்தகர்), குமுதினி (UK), நந்தகுமார் (UK), சிவகுமார் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் கீதபாலா, தேவநாயகி, சாந்தகுமார், நிசாந்தினி, டெனுசியா ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜிதா, பிரியா, பிரகீதன், ஹரணியா, டினுசன், மாதேஸ், ஆகாஷ், அபிநயா, நதீஸ், கரீஸ்னு, இலக்கியா, டனுஜன், டனுசா, டெனுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் இன்று(11.04.2024) வியாழக்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

72/9 பனிக்கர் லேன்,
பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
0778249234

## 31 ம் நாள் நினைவஞ்சலி



## விஜயரட்ணம் பாக்கியநாதன்

முன்னாள் முகாமையாளர் ( Saudi ), Director Myura Homes Pvt Ltd
நிர்வாகசபை உறுப்பினர் - தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானம்

தவப்பேறாய் : 01.04.1947 ❋ சிவப்பேறாய் : 13.03.2024

எங்கள் உயர்விற்காய்
உங்கள் வாழ்வை தந்த தந்தையே !
எம்மை விட்டுச் சென்று இன்று
மாதமொன்றாகியதோ
நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை
நீங்கள் தந்த வாழ்க்கை
நீங்கள் காட்டிய பாதை
என்றும் மறவோம் நாம்
உயிருள்ளவரை உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அழியாது.
துர்க்கை அம்மன்தாள் பணிந்து
உங்கள் ஆத்மா சாந்திக்காய் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!


குடும்பத்தினர்
உடையார்வளவு , புன்னாலைக்கட்டுவன் தெற்கு , சுன்னாகம். தொடர்பு : 0779068017

(எ-42197)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கணித பாடப் பயிற்சி வகுப்பு, சாவகச்சேரியிலுள்ள DBMS கணினிக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் சாவகச்சேரி, சிவன் கோவில் வீதியிலுள்ள கலைமன்ற கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-9)



யாழ்.மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பொது மருத்துவமனையில், இலவச கண்பரிசோதனை முகாம் ஒன்று அண்மையில் இடம்பெற்றது. (ப-100)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பார்வைக் குறைபாடுள்ளவர்கள் இனங்காணப்பட்டு அண்மையில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள் ளன. ஏ.யூ. லங்கா நிறுவனத்தால் இலவசமாக இந்தக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (எ-13)



கோண்டாவில் இராமகிருஷ்ணமகாவித்தியாலயத்தில் தரம்- 6 முதல் தரம் 12 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு நேர முகாமைத்துவம், கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான பொறிமுறைகள் என்பன தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு, அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (ப-66)





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவினால் வவுனியா வடக்கு ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்துக்கு ஸ்மார்ட் வகுப்பறை ஒன்று அண்மையில் கையளிக்கப்பட்டது. சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் குறித்த ஸ்மார்ட் வகுப்பறைத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது. (ஒ-110)



அரியாலை கிழக்கு, நாவலடிக் கிராமத்தில் சர்வதேச மகளிர்தின நிகழ்வு. அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச செயலகக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)

# இப்தார் நிகழ்வு

முல்லைத்தீவு, ஏப்.11

முஸ்லிம் மக்களின் முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றான இப்தார் நிகழ்வு, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் மு.முபாரக் தலைமையில், முல்லைத்தீவு மாவட்டச்செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில், அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் கலந்து சிறப்பித்ததோடு, மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.குணபாலன், மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-13)






கொடிகாமம் வடக்குக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளரும், சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினருமான வைத்திலிங்கம் ஜெகதாஸ், சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ.ஜூட்சன் முன்னிலையில் யாழ்.நீதிமன்ற வலய சமாதான நீதிவானாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (ப-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதங்க வித்துவான் வரதராஜசர்மா மறைவு

யாழ்ப்பாணம், ஏப். 11

தெல்லிப்பழையைச் சேர்ந்த பிரபல மிருதங்க வித்துவான் கலா பூஷணம் பிரம்மஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐயர் வரதராஜசர்மா நேற்றுப் புதன்கிழமை தனது 69 ஆவது வயதில் யாழில் காலமானார். தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபைத் தலைவராகக் கடந்த பல வருடங்களாகச் சிறப்பான சேவைகள் ஆற்றிவந்துள்ள இவர், தெல்லிப்பழை வீணாக்கடவை காசி விநாயகர் ஆலய வளர்ச்சியிலும் பங்காற்றியுள்ளார். அத்துடன் சுன்னாகம் மயிலணி முத்துமாரி அறநெறிப் பாடசாலையிலும், தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை ஊடாகவும் மிருதங்கம், வாய்ப்பாட்டினை நீண்டகாலமாக மாணவர்களுக்கு கற்பித்து வந்துள்ளார். இதன் மூலம் தனக்கென ஒரு மாணவ பரம்பரையையும் இவர் கொண்டுள்ளார். பல்வேறு இசை மேடைகளைக் கண்டுள்ள கலா பூஷணம் பிரம்மஸ்ரீ சு.வரதராஜசர்மாவின் இழப்புக் குறித்து இசைக் கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் தமது இரங்கல்களைத் தெரிவித்து வருகின்றனர். (ம-66)


## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் திட்டமிடல் கிளையில்
அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி சிவஸ்கரன் சிபிலாறோஸ் அவர்களின்
பாசமிகு தந்தையார்



### அமரர் சுவாம்பிள்ளை மரிசலீன்

ஓய்வுபெற்ற அதிபர் ( SLPS - I )

தோற்றம் 16.01.1938 மறைவு 10.04.2024

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவின் துயரில்
பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், வேலணை.

## துயர் பகிர்கின்றோம்



அமரர்

### அம்பலவாணர் ஜெயராமன்

வயலின் வித்தகனே
வானளந்த புகழுடையீர்
வான்மிசையில் நீர் இருந்தும்
வந்துவிடு நாதமென
அரனடியில் அமைதி பெற
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

(CS/42193) J-1

தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர்
ஓய்வுநிலை சங்கீதபாட ஆசிரிய ஆலோசகர், இசை ஆசிரியர்கள்.

## பரமானந்தா சிறுவர் முதியோர் இல்லம் இல்லப்பணியாளர்கள் பதவி வெற்றிடங்கள்

கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. **பெண் சிறுமிகள் மேற்பார்வையாளர்:-**

**தகைமைகள்:**

* வயது 35 -55 வயதுக்குட்பட்டவர்கள்.
* கல்வி- க.பொ.த (சா/த)இல் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம் மற்றும் தமிழ் மொழி சித்தியுடன் 06 பாடங்களிற்கு குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
* இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றுதல் கட்டாயமானது.
* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
* **EPF, ETF** வழங்கப்படும்
* தங்குமிடம். உணவு இலவசம்

2. **பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்**

**தகைமைகள்:**

* வயது 35-55
* கல்வி- க.பொ.த சாதாரணதரம்
* தொழில் அனுபவம்
* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
* **EPF, ETF** வழங்கப்படும்
* உணவு இலவசம்

3. **பெண் உளவள ஆலோசகர்**

**தகைமைகள்:**

* வயது 35 -55
* கல்வி- உளவள கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள். குறைந்தது டிப்ளோமா
* சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
* **EPF, ETF** வழங்கப்படும்.
* தங்குமிடம். உணவு இலவசம்

4. **குறிப்பு** - நேர்முகத்தேர்வில் கிராமசேவகரின் நற்சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும். மற்றும் தேசிய அடையாள அட்டை. கல்வித்தகைமை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களும் எதிர்பார்க்கப்படுகின்றன.

5. **விண்ணப்ப முடிவுத் திகதி : 25.04.2024**

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

ஸ்ரீபரமானந்தா சிறுவர். முதியோர் இல்லம்,
வதிரி, கரவெட்டி.
தொலைபேசி இலக்கங்கள்-
021-226-3136, 021-226-5069, 0775147045

**செல்வி.தம்பு சறோஜா**
(தலைவர்)

(CR 42201) A-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 10 . 1944

இறப்பு 10 . 04 . 2024

### அன்ரனி ஹென்றி பங்கிராஸ்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும். இராஜேந்திரா வீதி. குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட அன்ரனி ஹென்றி பங்கிராஸ் நேற்று (10.04.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அன்ரனி - கிறேஸ் சிசிலியா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அருளம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சுசிலாவின் அன்புக் கணவனும், விஸ்மார்க் (மலேசியா) மற்றும் காலஞ்சென்றவர்களான மெற்றில்டா. கிறில் ஆகியோரின் அன்புச் சகோதரனும். றஞ்சனி மற்றும் காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனரும். சயிரா. கிறேஸ். விக்ரர். வவா ஆகியோரின் அன்பு தந்தையும். முரளி. உதயன். சசி. ரஜீவன் ஆகியோரின் மாமனாரும். தர்மினி. கீர்த்தனா. ஸ்ரெபி. டிருசன். டிருசா. ஆகாஸ். ஏனோக். டறன்ஸ். அருண் ஆகியோரின் பாசமிகு பாட்டனும். கபிரியேலா. அயிஸ். அட்வின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (12.04.2024) வெள்ளிக்கிழமை மாலை 2.00 மணியளவில் புனித மரியாள் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
077 024 6431
077 088 4920

(CS/54687) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 02 . 05 . 1955

மறைவு 10 . 04 . 2024

### சுந்தரமூர்த்தி ஐயர் வரதராஜ சர்மா

**(கலாபூசணம், மிருதங்க வித்துவான் - ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியர்)**

தெல்லிப்பளை துர்க்காபுரம், கல்வளைவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சுந்தரமூர்த்தி ஐயர் வரதராஜசர்மா அவர்கள் நேற்று (10.04.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான சுந்தரமூர்த்தி ஐயர் மற்றும் அன்னபூர்ணேஸ்வரி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு ஐயர் - புவனேஸ்வரி அம்மா `தம்பதியரின் பாசமிகு மருமகனும், கலாதேவியின் பாசமிகு கணவரும், மதுரா, மதுமிதா, பாரதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலச்சந்திரன், பிரதீபன், கமலநாத சர்மா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தியாகராஜ சர்மா, ரோகிணி, திருவாசகன், ஸத்யநாராயணன், அதிஸயா, அருளஜிவ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2024) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 1.00 மணியளவில் மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்வளவு,**
**துர்க்காபுரம்,**
**தெல்லிப்பளை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 376 1609**

(CS 00188) S-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் மைதானம் பழைய மாணவர் சங்கத்தினரால் புதுப்பொலிவுடன் புனரமைத்து கையளிக்கப்பட்டுள்ளது. பாடசாலை அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பங்கேற்றார். (ச-75)

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் வித்தியாலய மைதானத்தில் அதிபர் எஸ்.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. (ச-17)




## காணவில்லை

### அரசப்பன் நாகமுத்து



அரசப்பன் நாகமுத்து கடந்த (09.04.2024) அன்று பரந்தன் சந்தியில் காணாமல் போயுள்ளார்.

தொ.இல:077 052 3614
076 601 6268
071 460 7220

(CS 28519) A-1


# கணித பாட கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 11

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தினால் மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்னாள் உறுப்பினர் ஆசிரியர் அமரர் வே. கருணாகரன் ஞாபகார்த்தமாக க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்காக நடத்தப்படும் கணிதபாடக் கருத்தரங்கு இன்று இடம்பெறவுள்ளது.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் அதிபர் பாலசிங்கம் பாலசுப்பிரமணியம் தலைமையில் காலை 8 மணி முதல் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கணித பாட ஆசிரியர் க.தளையரட்ணம் வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம)


## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும். மாங்குளம் புலுமச்சிநாதகுளத்தை வசிப்பிடமாகவும், தற்பொழுது சுண்டுக்குளியில் வசித்து வந்தவருமாகிய ஜெயராணி தியாகராஜா அவர்கள் நேற்று (10.04..2024) புதன்கிழமையன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான A.K.ஆறுமுகம் - சுகிதரட்ணம் தம்பதியரின் செல்வ புதல்வியும், காலஞ்சென்ற S.தியாகராயாவின் அன்பு மனைவியும், திரு.T.ஜெயபாலச்சந்திரன் (புலுமச்சிநாதகுளம்), திருமதி.மனோகரி அன்ரனி (லண்டன்), திருமதி.குமுதினி Fitch (லண்டன்) காலஞ்சென்ற ஜெயலோகேந்திரன் (மட்டக்களப்பு), திருமதி.வதனிசுகுமாரன் (லண்டன்), காலஞ்சென்ற திரு.ஜெயக்குமாரசூரியன் (மாங்குளம்), திரு.ஜெயகமலகாந்தன் (லண்டன்), காலஞ்சென்ற திரு.ஜெயதேவநேசன் ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி முத்துராணி சுப்பிரமணியம் (சென்னை), திருமதி பத்மராணி விஜயராஜா (வன்கூவர் கனடா), திரு.ஏ.சௌந்தரராஜா (வன்கூவர் கனடா), செல்வி.இந்திராணி ஆறுமுகம் (சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்), திருமதி யோகராணி யோகசுந்தரம் (கொழும்பு), திரு. W.A.தர்மராஜா (ரொறன்ரோ, கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.04.2024) White House மலர்ச்சாலையில் காலை 08.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை, பின்பு பி.ப 03.00 தொடக்கம் பி.ப 06.00 மணிவரை வைக்கப்படும். நல்லடக்க ஆராதனை White House பிரதான வீதியிலுள்ள மலர்ச்சாலையில் (12.04.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் நடைபெற்று, அதைத் தொடர்ந்து நல்லடக்கமானது பரியோவான் கல்லறையில் நடைபெறும். இத் தகவலை ஏற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

தகவல்:
திரு.T.ஜெயபாலச்சந்திரன் 077 969 9744
திருமதி.குமுதினி Fitch 074 155 4849

(CS 28517) S-1



## மரண அறிவித்தல்



மலர்வு 15 . 04 . 1927

உதிர்வு 10 . 04 . 2024

### இராஜேந்திரம் வாலாம்பிகை

காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் அன்னப்பிள்ளையின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா சின்னப்பிள்ளையின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராஜேந்திரம் அவர்களின் மனைவியும். காலஞ்சென்றவர்களான ஸ்ரீகாந்தன், சொரூபகாந்தன், இராஜகாந்தன் மற்றும் றூபகாந்தன், சொரூபகாந்தி, இந்திரகாந்தன், சந்திரகாந்தி, கௌரிகாந்தி, குபேரகாந்தன் ஆகியோரின் அன்புத்தாயாரும் லைலாக்குமாரி, சுசீலாதேவி, காலஞ்சென்றவர்களான ஜெயதேவி சத்தியேந்திரன் மற்றும் அசோகலிங்கம், சண்முகராஜா, துஷ்யந்தி ரதிதேவி ஆகியோரின் மாமியாரும், அமுதசுரபி, ரஞ்சித்காந்தன், அமுதசக்தி, ராஜேந்திரா, அபிரா, சத்தியவாணி, சத்தியப்பிரியா, சத்தியசாலினி, கனோஜி, கரிஸ், றீனா, ஆரணி, ஆதவன், குறிஞ்சிகுமரன், காயத்திரி, வைஸ்ணவி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.04.2024 வியாழக்கிழமை இன்று பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

80, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி
யாழ்ப்பாணம்.

தகவல்:
கனோஜி (பேரன்)
074 110 5255, 077 663 6365

(CS 28518) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சக்கட்டத் திரில் ஆட்டத்தில் குஜராத் இறுதிப் பந்தில் வெற்றி

புதுடில்லி, ஏப். 11
ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில், ராஜஸ்தான் அணி நிர்ணயித்த 197 என்ற இலக்கை இறுதிப் பந்தில் எட்டி வெற்றிபெற்றது குஜராத் அணி.
முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்ப வீரர்களான பட்லர் 8 ஓட்டங்களுடனும், ஜெய்ஸ்வால் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார்கள். அதன் பின்னர் இணைப்பாட்டத்தை அமைத்துக்கொண்ட அணித் தலைவர் சஞ்சு சம்சன் மற்றும் ரியான் பராக் இருவரும் இணைப்பாட்டமாக 130 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். இருவரும் அரைச்சதத்தைக் கடந்தனர்.
48 பந்துகளில் 76 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார் ரியான் பராக். சாம்சன் 38 பந்துகளில் 68 ஓட்டங்களைக் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார். 20 ஓவர்களின் முடிவில் 3 விக்கெட்களை இழந்து 196 ஓட்டங்களை ராஜஸ்தான் அணி பெற்றது.
பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணி ஆரம்பம் முதல் மந்தமான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. சாய் சுதர்




சன் தான் பெற்ற 35 ஓட்டங்களுக்காக 29 பந்துகளை எதிர்கொண்டார். மத்தியூ வேட், அபினவ் மனோகர் அடுத்தடுத்து ஆட்டமிழக்க கில் நிதானத்தைக் கடைப்பிடித்தார். ஒரு பக்கத்தில் இலக்குச் சரிவு மற்றப் பக்கத்தில் ஓட்டச்சராசரி வீழ்ச்சி என குஜராத் அணி இரட்டைப் பின்னடைவுக்குள் தள்ளப்பட்டது.
படிப்படியாக அதிரடிக்குத் திரும்பிய கில் 44 பந்துகளில் 72 ஓட்டங்களைப் பெற்றார். தெவட்டியா 11 பந்துகளில் 22 ஓட்டங்கள், ரசிட் கான் 11 பந்துகளில் 24 ஓட்டங்கள் என கடைசிக்கட்டத்தில் அதிரடியைக் காட்ட இறுதிப் பந்தில் வெற்றி பெற்றது குஜராத். (ம)

## தி.மு.க., காங்கிரஸ்தான் கச்சதீவைக் கொடுத்தன

### தமிழகத்தில் மோடி நேற்றுப் பரப்புரை

சென்னை, ஏப். 11
கச்சதீவை இலங்கைக்கு தி.மு.க.வும், காங்கிரஸ் கட்சியும்தான் தாரைவார்த்தன. தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் கைதுசெய்யப்படும்போது தி.மு.க. போலிக் கண்ணீர் வடிக்கிறது - என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், தேர்தல் பரப்புரைகள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன. பிரதமர் மோடி இரண்டு நாள்கள் பயணமாக தமிழகத்துக்கு வருகைதந்து அங்கு தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளார். நேற்று இடம்பெற்ற பரப்புரைக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
தமிழில் பேச முடியாததற்கு மிகவும் வருத்தப்படுகிறேன். பொதுமக்களுக்கு தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்ப் புத்தாண்டில் தமிழ்நாடு மேலும் வளர்ச்சி அடையும் என நம்புகிறேன். முருகப் பெருமானை நான் வணங்குகிறேன்.
கச்சதீவை இலங்கைக்கு தி.மு.க.வும் காங்கிரஸ் கட்சியும்தான் தாரைவார்த்தன. தமிழக மீனவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்படும்போது காங்கிரஸ் மற்றும் தி.மு.க. கண்ணீர் வடிக்கின்றன. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்களை இலங்கையில் இருந்து பா.ஜ.க. மீட்டு வந்தது. மீனவர்களுக்கு மட்டுமன்றி தமிழ்நாட்டுக்கே தி.மு.க.வும் காங்கிரஸ் கட்சியும் துரோகம் செய்கின்றன. கச்சதீவை யாருக்காக அவர்கள் இலங்கைக்குக் கொடுத்தனர் என்பது நமக்குத் தெரியும். ஆனால் காங்கிரஸும் தி.மு.க.வும் அதுபற்றிப் பேசுவது இல்லை - என்றார். (அ-ம)

### பிற்போடப்பட்ட...

அம்பலாங்கொடவிலுள்ள தனது இல்லத்துக்கு முன்பாக அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
வேட்புமனுத் தாக்கல் செய்த தேர்தலை தாமதப்படுத்துவது எதேச்சாதிகாரத்துக்குச் சமமானது. அரசாங்கத்தின் செல்வாக்குக் காரணமாகவே உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது.
தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தவிர்த்து அதிகாரிகள் ஆட்சி புரிவது மக்களின் உரிமைகளை மீறும் செயல் என்றும் தேசப்பிரிய சுட்டிக்காட்டியுள்ளார். (ச-இ)

### இராணுவத்...

விடயங்களில் பின்னிப் பிணைந்துள்ளோம். அண்டை நாட்டுக்கு முதலிடம் என்ற இந்தியாவின் கொள்கைக்கிணங்க இலங்கையுடன் தோளோடுதோள் சேர்ந்து செயற்பட்டு வருகிறோம். உங்கள் எல்லோருக்கும் தெரியும் இலங்கையின் நம்பிக்கைக்குரிய நண்பன் இந்தியா என்று. கட்டுமானம், பொருளாதாரம், கல்வி, சுற்றுலாத்துறை போன்ற பல்வேறு விடயங்களில் இந்தியா, இலங்கையுடன் இணைந்து செயற்பட்டு வருகிறது. ஏனைய துறைகளான இராணுவப் பாதுகாப்பு விடயங்களிலும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகிறோம். பாதுகாப்பு என்று எடுத்துக்கொண்டால் புவியியல் ரீதியாக மரபுவழியில்நாங்கள்பிணைக்கப்பட்டுள்ளோம்.
கடற்படைக்கப்பல்கள், உலங்குவானூர்திகள், இராணுவ விமானங்கள், குறுந்தூர மற்றும் நெடுந்தூர ஏவுகணைகள், இலத்திரனியல் போர்க்கருவிகள் போன்றவற்றை நாம் எமக்காக மட்டும் உற்பத்தி செய்யவில்லை. எமது பங்காளியும் நட்பு நாடுமான இலங்கையும் இதே திறன்களைக் கொண்டிருக்கவேண்டும் என்பதே எமது விருப்பம் - என்றார்.
இந்தியாவின் ஆயுத ஏற்றுமதி வருமானம் 2.6 பில்லியன் டொலர் என்பதும், 85 நாடுகளுக்கு இந்தியா ஆயுத தளவாடங்களை ஏற்றுமதி செய்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-6)

### திருட்டு...

மீட்கப்பட்டது. சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள மருத்துவ நிலையத்தில் சிகிச்சை பெறச்சென்ற ஒருவர் தனது மோட்டார்சைக்கிளை அங்கு நிறுத்தி விட்டுச் சென்றுள்ளார். திரும்பிவந்து பார்த்த போது மோட்டார்சைக்கிள் திருடப்பட்டிருந்தது.
இதையடுத்து அவர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார். விரைந்து செயற்பட்ட சாவகச்சேரிப் பொலிஸார் பொலிஸ் நிலையங்களுக்கும் சோதனைச் சாவடிகளுக்கும் தகவல் வழங்கினார்கள். இதையடுத்து மன்னார் சோதனைச்சாவடியில் வைத்து மோட்டார்சைக்கிள் மீட்கப்பட்டதுடன், மோட்டார்சைக்கிளைத் திருடியவரும் கைதுசெய்யப்பட்டார். (அ-ம-9)

### யாழ்...

மனைக்கு தினமும் 30 - 40 பைந்த் குருதி தேவைப்படும் நிலையில், பொது மக்கள் ஆர்வத்துடன் குருதிக்கொடை முகாமில் கலந்துகொள்ளவேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.எஸ்.யமுனாநந்தா தெரிவித்துள்ளார். (அ-ம)

### நெளுக்குளத்தில்...

வவுனியா - நெளுக்குளம் குளக்கட்டுப் பாதையூடாகச் சென்ற நபரொருவர் குளத்தினுள் சடலம் மிதப்பதை அவதானித்த நிலையில், பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்குச் சென்ற நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.
இதேவேளை - சடலத்தை அடையாளம் காண உதவுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-110)

### இலங்கைத்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"தமிழர்கள் அறம் சார்ந்து வாழ்ந்த மறவர்கள். காவிரியில் ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்கமுடியாது என கர்நாடகாவில் கூறுகிறார்கள். தமிழர்களுக்குத் தண்ணீர் கொடுக்க நாங்கள் என்ன முட்டாள்களா எனக் கேட்கின்றனர். ஒரு நொடி நினைத்துப் பாருங்கள், காட்டுக்குள் வீரப்பன் இருந்திருந்தால், காவிரியில் ஒரு சொட்டுத் தண்ணீர் கொடுக்க முடியாது எனக் கூறமுடியுமா? ஒகேனக்கல் எங்களுக்குச் சொந்தம் எனக் கூற முடியுமா?
வரலாற்றை அறிந்து கொண்டால் தமிழர்கள் விழித்துக் கொள்வார்கள் என்பதற்காக, திட்டமிட்டு அழித்தார்கள். இலங்கையில் தமிழர்களைக் கொன்றது காங்கிரஸ். உடனிருந்தது தி.மு.க. வேடிக்கை பார்த்தது அ.தி.மு.க, பா.ஜ.க. கச்சதீவைத் தாரை வார்த்தது காங்கிரஸ். மணிப்பூர் கலவரத்துக்குக் காரணம் பா.ஜ.க. இத்தகையவர்களுக்கா நீங்கள் வாக்களிக்கப்போகின்றீர்கள்? - என்றார். (அ-ம)

### சு.க.வின்...

நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த நிலையில் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான சுதந்திரக்கட்சியின் குழுவொன்று நிர்வாக சபைக்கூட்டத்தைக் கூட்டி, பதில் செயலாளர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமித்துள்ளது.
பதில் தலைவராக நிமால் சிறிபால டி சில்வா தெரிவுசெய்யப்பட்டார். இந்தக் கூட்டத்தில் கட்சியின் போஷகரான முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் பங்கேற்றிருந்தார். இதன்போது எடுக்கப்பட்ட முடிவுகள் தேர்தல் ஆணைக்குழுவிடமும் கையளிக்கப்பட்டது. எனினும், இந்த நியமனம் சட்டவிரோதம் என மைத்திரி தரப்பு விளக்கமளித்துள்ளது.
இந்த நிலையிலேயே கட்சி யாப்பின் அடிப்படையில் புதிய நியமனம் செல்லுபடியாகுமா? தேர்தல் ஆணைக்குழு எந்தத் தரப்புடன் அதிகாரபூர்வமாகத் தொடர்புகொள்ளவேண்டும்? என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய தேர்தல் ஆணைக்குழு கூடவுள்ளது. (அ-ம-44)

### திருநெல்வேலி...

யத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆர்ப்பாட்டங்களின்...

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு ஜுன் மாதம் வரை நடைபெற்ற 30 ஆர்ப்பாட்டங்களில் பொலிஸார் சட்டவிரோதமாக ஆயுதங்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபையின் தெற்காசிய பணிப்பாளர் ஸ்ருதி சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

17 ஆர்ப்பாட்டங்களில் தடியடி, நீர்த்தாரைப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிரயோகம் என்பன இடம்பெற்றுள்ளன. 2022 தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அமைதியான ஆர்ப்பாட்டங்களின்போது ஆர்ப்பாட்டக்காரர்களைப் பாதுகாக்கவேண்டிய பொலிஸாரே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அத்துடன், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களின்போது புலனாய்வாளர்களைத் தடுத்து நிறுத்த முற்படுதல், துன்புறுத்தல், கண்காணித்தல் போன்ற செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

39 நேர்முகங்களையும் 95 காணொலி தொடர்பான விசாரணைகளையும் சர்வதேச மன்னிப்புச்சபை மேற்கொண்டுள்ளது. கொழும்பு, யாழ்ப்பாணம், பத்ர முல்லை, களனி, காலி போன்ற இடங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக இலங்கைப் பொலிஸாரிடம் சர்வதேச மன்னிப்புச்சபை விளக்கம் கோரியுள்ளது. எனினும் இதுவரை எந்த விதப் பதிலும் கிடைக்கவில்லை - என்றுள்ளது. (அ-ம-6)

## உதயனுக்குள்...

உதயன் பணிமனைக்குள் நேற்று இரவு அத்துமீறி நுழைந்த இனந்தெரியா நபர் ஒருவர், உதயனுக்குள் அட்டூழியத்தில் ஈடுபட்டதுடன் கொலை அச்சுறுத்தலும் விடுத்தார்.

மதுபோதையில் இருந்த அந்த நபர், நேற்று இரவு 8 மணியளவில் உதயன் அலுவலகத்துக்குள் நுழைந்தார். உதயனின் பணியாளர்களுடனும், காவலாளியுடனும் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசிய அவர், ஆசிரியர் உள்ளிட்ட ஆசிரியபீடத்தினர், ஏனைய பணியாளர்களுக்குக் கொலை அச்சுறுத்தலையும் விடுத்தார்.

பொலிஸாரிடம் சம்பவம் தொடர்பில் முறையிட்டு, தன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் தான் சிறையில் இருந்து வெளிவந்ததும் உதயன் பணியாளர்களை நிச்சயம் பழிவாங்குவேன் என்று தெரிவித்த அவர், 'தனியாகத்தானே போய் வருகின்றீர்கள்' என்று ஆசிரிய பீடத்தினருக்கு உயிர் அச்சுறுத்தலும் விடுத்தார்.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவரைக் கைதுசெய்தனர். அவருக்கு எதிராகப் பொலிஸாரிடம் முறைப்பாடும் பதிவுசெய்யப்பட்டது. (அ-ம)


# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 10 . 1957



மறைவு 10 . 04 . 2024

## முத்தையா கெங்காதரன்

(ஓய்வு நிலை மின்சார சபை ஊழியர்-சுன்னாகம்;
நிர்வாக சபை உறுப்பினர்-அழகொல்லை விநாயகர் ஆலயம்)

அளவெட்டி மத்தியை பிறப்பிடமாகவும் அலுக்கை அளவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா கெங்காதரன் நேற்று (10.04.2024) காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர் முத்தையா (ஓய்வு பெற்ற கிராம சேவையாளர்-அளவெட்டி)-நேசமலர் தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான காசிப்பிள்ளை-இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கௌசலா அவர்களின் பாசமிகு கணவரும், கோபிகன் (3D Mobile) மற்றும் சிந்துஜன் (People's Leasing - Jaffna) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஷயானியின் அன்பு மாமனாரும், அபிலாஷின் பாசமிகு பேரனும், காலம் சென்றவர்களான தாட்ஷாயினி, சிறீதரன், பகீரதன் மற்றும் தில்லை ஈஸ்வரி, செல்வநாயகி, சுபாஜினி (ஓய்வு நிலை நிதி உதவியாளர்-வலிகாமம் கல்வித் திணைக்களம்), சசிதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிருபாநாயகி, கிருபாகரன், கருணாநந்தசோதி, கோகிலநாயகி, சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.04.2024) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

அலுக்கை
அளவெட்டி கிழக்கு
077 574 0231, 077 476 7241

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42196) V-1

# மரண அறிவித்தல்



## துரைச்சாமி ஸ்ரீஸ்கந்தராசா

மண்ணில் 07.10.1955 — விண்ணில் 10.04.2024

வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி ஸ்ரீஸ்கந்தராசா நேற்று (10.04.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - அமராவதி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம் தம்பதியரின் அன்பு மருமகனும், தனேஸ்வரியின் (கிளி) அன்புக் கணவரும், லவன், அமரர் கவிதா, குகதாசன் (அவுஸ்திரேலியா), துருசிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியதர்ஷினி, உஷாந்தினி, ஸ்ரீபரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சாந்தராசா, விசாகராசா மற்றும் தியாகேஸ்வரன், சாந்தலட்சுமி (கனடா), உதயசூரியன், உதயேஸ்வரன், கோடீஸ்வரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதராசா, காலஞ்சென்ற தர்மலிங்கம், பாலசிங்கம், கனகேஸ்வரி (கண்ணம்மா), தில்லைச் சிவம் ஆகியோரின் மைத்துனரும், வானுஜன், பவித்திரன், சாருஜன், மகிஷன், வாகீசன், யதுஷன், கவிஷன், ரக்ஷன், சபிக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.04.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வேலணை மேற்கு,
7ஆம் வட்டாரம்.

தகவல்: குடும்பத்தினர்
076 490 8821

(CS 182) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருந்தாளர் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் மருந்தகம் ஒன்றிற்கு **மருந்தாளர் / மருந்தக அனுமதிப்பத்திர'** வைத்திருப்பவர் தே

சம்பளம் நேரில் பேசித் தீர்மா..ிக்கப்ப.

077 222 8950, 070 522 8950

(CS 46684) J-1



## பணிப் பெண் தேவை

யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த கொழும்பில் வசிக்கும் குடும்பத்தினருக்கு தங்கி நின்று பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.

உணவு தங்குமிடம் இலவசம்.

சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:

077 3866 250



# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு முன்பாக 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- 18 அடிப்பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நன்னீர் ஊற்று சூழல்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- மருதனார்மடம் இராமநாதன் கலைக் கல்லூரிக்கு அருகாமையில் அமைந்துள்ளது.
- ஒரு பரப்பின் விலை 35 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்:

**காலை 06.00 மணிதொடக்கம்**
**மாலை 06.00 மணிவரை**

(CS (28516) V-1

தொடர்புகளுக்கு:
ஜெயம்
**077 814 7389, 077 986 5457**


# சிறைக்கைதிகளுக்கு பலகாரங்கள்

கொழும்பு. ஏப். 11

புதுவருடத்தை முன்னிட்டு, சிறைக்கைதிகளுக்கு உணவுப்பண்டங்களையும் பலகார வகைகளையும் வழங்குவதற்கு உறவினர் மற்றும் நண்பர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

12 ஆம், 13 ஆம் திகதிகளில் கைதிகளின் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் கைதிகளுக்கு உணவுப்பண்டங்களையும் பலகார வகைகளையும் வழங்கலாம் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. முஸ்லிம்கள் ரமழானை முன்னிட்டு தமது உறவுகளுக்கு 11 ஆம் திகதி உணவுகள், பலகாரங்களை வழங்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-6)


## விற்பனைக்கு

முட்டை இடும் பருவத்தில் ஊர்க்கோழிகள் விற்பனைக்கு உண்டு (கோண்டாவில் மேற்கு)

T.P: 074 356 8913, 077 841 4240



## வேலையாட்கள் தேவை

முறிகண்டியில் அமைந்துள்ள சைவ உணவகத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை (தங்கி நின்று வேலை செய்யலாம்)

- சுத்திகரிப்பாளர்
- சமையல் உதவியாளர்
- முகாமையாளர்
- காசாளர்
- சமையல்காரர்
- உணவு பரிமாறுபவர்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும்.

தொடர்புகளுக்கு: 077 386 6250

(CS 54692) V-1


# மருத்துவர் கபில வழக்கு; இம்மாத இறுதியில் தீர்ப்பு

சுகாதார அமைச்சின் மருந்து விநியோக பிரிவுக்குப் பொறுப்பான மருத்துவர் கபில விக்கிரம நாயக்க மீதான வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 26ஆம் திகதி வழங்கப்படும் என்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சமரக்கோன் தெரிவித்துள்ளார். (ச-6)


## சிறிராம் ஜுவல்லர்ஸ்

- ✱ யாழ். நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்குகவுள்ளோம்.
- ✱ 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
- ✱ அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக் கழிவில் வழங்கப்படும்.
- ✱ அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

இல. 158, 193
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 165 1729, 07777 305 67, 021 222 8334

(CR 42200) V-1



Techna
Technical institute
Smart thinking leads to innovate

## A/L தொழினுட்பப்பிரிவு

**A/L 2024 DAY CLASS ஆரம்பம்**

17.04.2024 புதன்கிழமை, மாலை 3.30 மணிக்கு

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | - M.விஷ்ணு, P.நிரோஜனன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | - S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - S.சக்தி |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) | - T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஜீபன் |
| கணிதம் 07 | - T.சசிகரன் |
| புவியியல் | - S.P.கரன் |

A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன.

2025 பிரிவினருக்கான BSTவகுப்புக்கள் இலவசமாக நடைபெறுகின்றன

077 170 3549

வீரசிங்கம் மண்டபம், 3ம் மாடி, யாழ்ப்பாணம்.


# 4ம் வருட நினைவு தினம்



தோற்றம் 13 • 11 • 1956

நிறைவு 26 • 03 • 2020

திதி: பங்குனி மாத வளர்பிறை திருதியை

"ஈச்சமோட்டையின் தத்துவஞானி"

என்று சான்றோர்களால் அழைக்கப்பட்ட

## சத்தியானந்தசிவம் தவசீலன் J.P


(தவம்)

நாலும் தெரிந்த நன் முத்தே நீர் எம்மை
விட்டு சென்று நான்கு ஆண்டுகள் ஆனதோ..
நீர் எம்முடன் இருக்கின்றீர் என்ற நம்பிக்கையில்
உம் வழியில் எம் நற்பணிகள் இன்றும் என்றும் தொடரும்.
"அன்பே சிவம்"
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS/28510) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 24 • 03 • 1926

மறைவு 08 • 04 • 2024

## சின்னத்தம்பி தியாகராஜா

(அப்பையா அண்ணா)

யாழ்ப்பாணம் கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, யாழ்ப்பாணம் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தியாகராஜா (அப்பையா அண்ணா) அவர்கள் கடந்த 08.04.2024 திங்கட்கிழமை இறைவனடிசேர்ந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற ஞானபூரணம் அவர்களின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (11.04.2024) காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள், மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

133, புகையிரத நிலைய வீதி
கொக்குவில் கிழக்கு.

074 058 7792
077 142 7658

(CS/54683) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.04. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.